# சோதிடமலர்

# SOTHIDA MALAR




**உள்ளே..........**

**உபாலி விஜயவர்த்தன உயிரோடிருக்கிறாரா?**

- ஜன்ம இலக்கினம் (கும்பம்)
- திருமணம் தடைப்படுவதேன்
- தமிழ் ஈழம் மலருமா?
- சோதிடம் கற்போம்
- இம்மாதம் உங்கள் பலன்
- மணப்பந்தல்

இன்னும் பல

துந்துபி ௵ பங்குனி ௴ (15-3-83—13-4-83) விலை ரூபா 3·00

உ

# சோதிடமணி


மாத சஞ்சிகை

ஆசிரியர்: பிரம்மஸ்ரீ கி. சதாசிவசர்மா (சம்ஸ்கிருத பண்டிதர்)

மலர் 5 | துந்துபி ௵ பங்குனி ௴ (15-3-1983) | இதழ் 12


சுரவர வர்ஷிணி துர்த்தர தர்ஷிணி
துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர தோஷிணி
கில்ப்பிஷ மோஷிணி கோஷரதே
தநுஜ நிரோஷிணி திதி சுத ரோஷிணி
துர்மத சோஷிணி சிந்து சுதே
ஜய ஜய ஹே மஹிஷாசுர மர்த்தினி
ரம்ய கபர்த்தினி சைலசுதே !

❋❋
❋❋

[விவேகம், வைராக்கியம், துறவு இவைகள் மூலமாகத் தெளிவுள்ள அறிவானது ஆத்மஸ்வரூபத்தை நேரே கிரகிக்குமானால் அதற்கு ஞான யோகம் என்று பெயர். கர்மானுஷ்டானத்தை முறையாகச் செய்துவருவதால் அறிவு (ஞானம்) தெளிவடைகின்றது. தெளிந்த அறிவு ஆத்மஸ்வரூபத்தை விளக்குகிறது. எனவே ஞானயோகம், கர்மயோகம் ஆகிய இரண்டும் ஆத்மஸ்வரூபத்தை விளக்குதற்கு உபாயங்களாயிருப்பதால் இவ்விரண்டும். நன்னெறிகளாகின்றன. — கீதை]

## இந்த இதழில் ......................


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | நான் எப்படி | ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் | ... | 4 |
| 3 | பங்குனி மாதக் கிரகநிலை | ... | 5 |
| 4 | கால ஹோரைகள் | ... | 6 |
| 5 | பங்குனி மாத வானியற்காட்சி | ... | 7 |
| 6 | உபாலி உயிரோடிருக்கிறாரா? | ... | 8 |
| 7 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? | ... | 9 |
| 8 | ஜன்ம லக்கினம் | ... | 17 |
| 9 | திருமணம் தடைப்படுவதேன்? | ... | 22 |
| 10 | ஆய்வு மன்றம் | ... | 25 |
| 11 | சோதிடம் கற்போம் | ... | 26 |
| 12 | தமிழ் ஈழம் மலருமா? | ... | 27 |
| 13 | மணப்பந்தல் | ... | 30 |
| 14 | குறுக்கெழுத்துப் போட்டி | ... | 32 |

# நாள் எப்படி ?

பங் 1 செவ் (15-3-83) பிரதமை இரவு 12-02 வ. உத்தரட்டாதி முழுவதும், அமிர்தசித்தயோகம். வயல் தோட்ட வேலைகள் செய்ய நன்று.
ராகு 3-21 — 4-51

பங் 2 புத (16-3-83) துவிதியை இரவு 12-36 வ, உத்தரட்டாதி சித்தம் காலை 6-58 வரை, சந்திர தரிசனம். முக்கிய கருமங்களை காலை 6-58ற்கு முன் செய்யவும். ராகு 12-20 — 1-50

பங் 3 வியா (17-3-83) திரிதியை இரவு 12-23 வ. ரேவதி காலை 7-49 வரை சித்தாமிர்தம் பொதுவாக எல்லாச் சுபகருமங்களையும் மேற்கொள்ள நன்று. ராகு 1-50 — 3-20

பங் 4 வெ (18-3-83) சதுர்த்தி இரவு 12-01 வரை' அசுவினி காலை 8-18 வரை. அமிர்தசித்கம், சதுர்த்தி விரதம். விநாயகர் வழிபாடு செய்வதால் நல்லறிவு பெறலாம். காலை 8-18 ற்கு முன் நற் கருமங்கள் மேற்கொள்ளலாம் ராகு 10-49-12-19

பங் 5 சனி (19-3-83) பஞ்சமி இரவு 11-16 வரை, பரணி காலை 8-27 வரை, சித்தம், கார்த்திகை விரதம். முருகனை வழிபடுவதால் வெற்றியுண்டாகும். சுபகருமங்களை விலக்குக. ரா 9-18—10-48

பங் 6 ஞா (20-3-83) ஷஷ்டி இரவு 10-12 வரை, கார்த்திகை காலை 8-16 வரை, சித்தம், ஷஷ்டி விரதம். சுபகருமங்களை கா. 8-16ன் மேல் செய்க. ராகு 4-48 — 6-18

பங் 7 திங் (21-3-83) ஸப்தமி இரவு 8-46 வரை, ரோகிணி காலை 7-44 வரை, அமிர்தசித்தம். ஸாயன வருடப்பிறப்பு, வசந்தருது ஆரம்பம். அவசிய கருமங்களை இரவு 8-46ற்குள் செய்க. ராகு 7-47 — 9-17

பங் 8 செ (22-3-83) அஷ்டமி இரவு 7-00 வரை, மிருகசீரிடம் - சித்தம் காலை 6—52 வரை, அதன் மேல் திருவாதிரை-மரணம் 5-39 வரை, அஷ்டமி நவமி, சுபகருமங்களை விலக்குக. ரா. 3-16—4-46

பங் 9 புத (23-3-83) நவமி மாலை 4-54 வரை, புனர்பூசம் பி. இ. 4 07 வரை, சித்தம் மாலை 4-54 வரை, சுபகருமங்களுக்கு ஆகாது. ராகு 12-16 — 1-46

பங் 10 வியா (24-3-83) தசமி பி. ப. 2-29 வரை. பூசம் பி. இ. 2-19 வரை, அமிர்தசித்தம். பொதுவாகச் சுபகருமங்களுக்கு நன்று. ராகு 1-45 — 3-15

பங் 11 (வெ 25-3-83) ஏகாதசி பகல் 11-46 வரை, ஆயிலியம் இரவு 12-19 வரை, மரணம், ஸர்வ ஏகாதசி விரதம். விஷ்ணு வழிபாட்டால் நல்வாழ்வு கிட்டும். சுபகருமங்களைத் தவிர்க்க. ராகு 10-44 — 12-14

பங் 12 சனி (26-3-83) துவாதசி காலை 9-01 வரை, அதன்மேல் திரயோதசி பி. இ. 6-11 வரை, மகம் 10-14 வரை, அமிர்தசித்தம், சனிப்பிரதோஷ விரதம். பொதுவாக சுபகருமங்கள் செய்யலாம். மாலை சிவதரிசனத்தால் பாபங்கள் நீங்கும். ராகு 9-14 — 10-44

பங் 13 ஞா (27-3-83) சதுர்த்தசி பி. இ. 3-26 வரை, பூரம் இரவு 8-11 வரை, சித்தாமிர்தம், மங்கல கருமங்களுக்கு ஏற்றதல்ல. ராகு 4-44 — 6-14

பங் 14 திங் (28-3-83) பூரணை இரவு 12-57 வரை, உத்தரம் மாலை 6—21 வரை, சித்தம், பூரணை பங்குனி உத்தரம், சுபகருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 7-43—9-13

பங் 15 செ (29-3 83) பிரதமை இரவு 10—53 வரை அத்தம் மாலை 4-54 வரை, சித்தம். பூமி சம்பந்தமான கருமங்கள் செய்ய நன்று, ராகு 3-13 — 4-43

பங் 16 புத (30-3-83) துவிதியை இரவு 9-24 வரை, சித்திரை பி. ப 3-56 வரை, சித்தம், வீடு சம்பந்தமான கருமங்கள் தவிர்த்து ஏனையவற்றைச் செய்யலாம். ராகு 12-12 — 1-42

பங் 17 வியா (31-3-83) திரிதியை இரவு 8-35 வரை, சுவாதி பகல் 3-40 வரை, அமிர்தம் பி.ப.3-40வ. நற்கருமங்கள் செய்யலாம், ராகு 1-41 – 3-11

பங் 18 வெ (1-4-83) சதுர்த்தி இரவு 8-33 வரை, விசாகம் மாலை 4-08 வரை, சித்தம், மத்திம சுபதினம் ராகு 10-41 — 12-11

பங் 19 சனி (2-4-83) பஞ்சமி இரவு 9-19 வரை, அனுஷம் மாலை 5-22 வரை, சித்தம். மாலை 5 5 மணி வரை சுபகருமங்களுக்கு நன்று. ராகு 9-11 — 10-41

பங் 20 ஞா (3-4-83) ஷஷ்டி இரவு 10-50 வரை, கேட்டை - மரணம் மாலை 7-21 வரை. சுப கருமங்களை விலக்குக. ராகு 4-41 — 6-11

பங் 21 திங் (4-4-83) ஸப்தமி இரவு 12-56 வரை, மூலம்-சித்தம் இரவு 9-55 வரை, இரவு 9-55 வ. எல்லாக் கருமங்களையும் செய்யலாம். ராகு 7-40 — 9-10

பங் 22 செவ் (5-4-83) அஷ்டமி பி.இ. 3-25 வரை, பூராடம் - சித்தம் பி. இ. 12-52 வரை, அஷ்டமி - நவமி. ராகு 3-10—4-40

பங் 23 புத (6-4-83) நவமி பி. இ. 6-01 வரை, உத்தராடம் பி. இ. 4-00 வரை. அமிர்தசித்தம், சுபகருமங்களை நீக்குக, ராகு 12-10—1-40

பங் 24 வியா (7-4-83) தசமி-திருவோணம்-சித்தம் முழுவதும் எல்லா சுபகருமங்களுக்கும் நன்று. ராகு 1-39—3-09

பங் 25 வெ (8-4-83) தசமி காலை 8-28 வரை, திருவோணம் - மரணம் காலை 6-56 வரை, காலை 8 மணிக்கு மேல் புதிய கருமங்களை மேற்கொள்ளலாம். ராகு 10-38—12-08

பங் 26 சனி (9-4-83) ஏகாதசி பகல் 10-34 வரை, அவிட்டம்-சித்தம் காலை 9-35 வரை, ஸர்வ ஏகாதசிவிரதம் விஷ்ணுவழிபாடு செய்ய நன்று. அவசிய கருமங்களை பகல் 9 மணிக்குமுன் செய்க. ராகு 9-08—10-38

பங் 27 ஞாயி (10-4-83) துவாதசி பகல் 12-10 வரை, சதயம் பகல் 11-44 வரை, சித்தம், பிரதோஷவிரதம், மாலை சிவதரிசனம் செய்தால் பாபவிமோசனம் உண்டு. நற்கருமங்களை பகல் 11-44ற்கு முன் செய்க. ராகு 4-37—6-07

பங் 28 திங் (11-4-83) திரயோதசி பகல் 1-10 வரை, பூரட்டாதி-மரணம் பகல் 1-21 வரை, மங்கல கருமங்களுக்கு ஏற்றதினமன்று. ராகு 7-36—9-06

பங் 29 செவ் (12-4-83) சதுர்த்தசி பகல் 1-35 வரை, உத்தரட்டாதி பகல் 2-24 வரை, அமிர்தம் அமாவாசைவிரதம். பிதுர் தர்ப்பணத்தால் சந்தான விருத்தியுண்டாகும், நற்கருமங்களை நீக்குக. ராகு 3-06 – 4-36

பங் 30 புத (13-4-83) அமாவசை பகல் 1-28 வரை ரேவதி பகல் 2-54 வரை, மரணம். சுபகருமங்களை விலக்குக. ராகு 12-05—1-35

## இம்மாத விசேடம்

### பங்குனித் திங்கள்:

அம்பாள் வழிபாட்டுக்குரிய அதுவும் கண்ணகையம்மனுக்குச் சிறப்புடைய தினம் திங்கள் வாரமாகும். வடமாகாணத்தில் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலும், மேல் மாகாணத்தில் உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்திலும், பங்குனி மாதத் திங்கட்கிழமை தோறும் பொங்கல் வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருவதும் இத்தினத்திற்கு விசேடமாகும்.

### விஷுபுண்ணிய காலம்

சூரியன் விஷுரேகையைக் கடக்கும் தினமே விஷுபுண்ணியகாலமாகும். விஷுரேகை என்பது பூமியில் பூம்த்திய ரேகைக்கு நேராக ஆகாயத்தில் இருப்பதாகக் கருதப்படும் ரேகையாகும். சூரியன் வடக்கு நோக்கிச் சஞ்சரிக்கும் உத்தராயண மத்தியிலொரு முறையும், தெற்கு நோக்கிச் சஞ்சரிக்கும் தக்ஷிணாயன மத்தியிலொரு முறையுமாக இரு தினங்களில் சூரியன் விஷுரேகையைக் கடக்க நேரிடுகின்றது. உத்தராயண மத்தியில் வரும்தினம் மேஷவிஷுவம் என்றும் தக்ஷிணாயன மத்தியில் வருவது துலாவிஷுவம் என்றும் சொல்லப்படும்.

மேஷவிஷுவமும், மேஷசங்கிராந்தியும் முன்னர் ஒரே தினத்தில் நிகழ்ந்தமையால் இரண்டையும் ஒரே தினத்தில் வருடப்பிறப்பன்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்த விஷுதினம் வருடமொன்றுக்கு 50 விகலை வீதம் பின்னோக்கி நகர்ந்து கொண்டு வருவதால் இப்போது வருஷப்பிறப்புக்கு 23 தினங்கள் முன்னதாகவே நிகழ்ந்துவிடுகின்றது. இவ்வருடம் விஷுபுண்ணியகாலம் பங்குனி 7-ந்திகதி (21-3-83) திங்கட்கிழமை நிகழ்கின்றது. விஷுபுண்ணிய காலத்தில் செய்ய வேண்டிய தர்ப்பணாதிகளை இத்தினத்தில் செய்து பயன் பெறுவோமாக.

### பங்குனி உத்தரம்:

சுந்தரேஸ்வரப் பெருமான் மீனாக்ஷி தேவியை மதுரையில் திருமணம் செய்த தினமே பங்குனி உத்தரமாகும். சீதாராம கல்யாணம் நடந்ததும் இத்தினமே. மங்கல வாழ்வை விரும்பும் கன்னியரும், காளையரும் இவ்விரதத்தை அனுஷ்டித்தால் தாம் விரும்பிய மங்கல வாழ்வைப் பெறுவர் என்பது இத்தினத்தின் முக்கிய விசேஷமாகும்.

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### துந்துபி ஹு பங்குனி மீ 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை. (15-3-83 முதல் 13-4-83 வரை)

| இங் மார்ச் | தமி பங்கு | வாரம் | மீனம் ம.மி. முதல் (காலை) | மீனம் ம.மி. வரை (காலை) | மேடம் ம. மி. வரை (காலை) | இடபம் ம. மி. வரை (பகல்) | மிதுன ம. மி. வரை (பகல்) | கடகம் ம. மி. வரை (பி.ப) | சிங்கம் மி. ம. வரை (மாலை) | கன்னி ம. மி. வரை (இரவு) | துலாம் ம. மி. வரை (இரவு) | விருச்சி ம. மி வரை (இரவு) | தனுசு ம. மி. வரை (பி.இ) | மகரம் ம. மி. வரை (பி.இ) | கும்பம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | செவ் | 6 21 | 8 03 | 9 52 | 11 55 | 2 06 | 4 13 | 6 14 | 8 13 | 10 17 | 12 27 | 2 35 | 4 31 | 6 16 |
| 16 | 2 | புதன் | 6 17 | 7 59 | 9 48 | 11 51 | 2 02 | 4 09 | 6 10 | 8 09 | 10 13 | 12 23 | 2 31 | 4 27 | 6 12 |
| 17 | 3 | வியா | 6 13 | 7 55 | 9 44 | 11 47 | 1 58 | 4 05 | 6 06 | 8 05 | 10 09 | 12 19 | 2 27 | 4 23 | 6 08 |
| 18 | 4 | வெள் | 6 09 | 7 52 | 9 41 | 11 44 | 1 55 | 4 02 | 6 03 | 8 02 | 10 06 | 12 16 | 2 24 | 4 20 | 6 05 |
| 19 | 5 | சனி | 6 06 | 7 49 | 9 38 | 11 41 | 1 52 | 3 59 | 6 00 | 7 59 | 10 03 | 12 13 | 2 21 | 4 17 | 6 02 |
| 20 | 6 | ஞாயி | 6 03 | 7 44 | 9 33 | 11 36 | 1 47 | 3 54 | 5 55 | 7 54 | 9 58 | 12 08 | 2 16 | 4 12 | 5 57 |
| 21 | 7 | திங் | 5 58 | 7 40 | 9 29 | 11 32 | 1 43 | 3 50 | 5 51 | 7 50 | 9 54 | 12 04 | 2 12 | 4 08 | 5 53 |
| 22 | 8 | செவ் | 5 54 | 7 36 | 9 25 | 11 28 | 1 39 | 3 46 | 5 47 | 7 46 | 9 50 | 12 00 | 2 08 | 4 04 | 5 49 |
| 23 | 9 | புத | 5 50 | 7 32 | 9 21 | 11 24 | 1 35 | 3 42 | 5 43 | 7 42 | 9 46 | 11 56 | 2 04 | 4 00 | 5 45 |
| 24 | 10 | வியா | 5 46 | 7 28 | 9 17 | 11 20 | 1 31 | 3 38 | 5 39 | 7 38 | 9 42 | 11 52 | 2 00 | 3 56 | 5 41 |
| 25 | 11 | வெள் | 5 42 | 7 24 | 9 13 | 11 16 | 1 27 | 3 34 | 5 35 | 7 34 | 9 38 | 11 48 | 1 56 | 3 52 | 5 37 |
| 26 | 12 | சனி | 5 38 | 7 19 | 9 08 | 11 11 | 1 22 | 3 29 | 5 30 | 7 29 | 9 33 | 11 43 | 1 51 | 3 47 | 5 32 |
| 27 | 13 | ஞாயி | 5 33 | 7 15 | 9 04 | 11 07 | 1 18 | 3 25 | 5 26 | 7 25 | 9 29 | 11 39 | 1 47 | 3 43 | 5 28 |
| 28 | 14 | திங் | 5 29 | 7 12 | 9 01 | 11 04 | 1 15 | 3 22 | 5 23 | 7 22 | 9 26 | 11 36 | 1 44 | 3 40 | 5 25 |
| 29 | 15 | செவ் | 5 26 | 7 07 | 8 57 | 10 59 | 1 11 | 3 18 | 5 19 | 7 18 | 9 22 | 11 32 | 1 40 | 3 36 | 5 21 |
| 30 | 16 | புத | 5 22 | 7 04 | 8 54 | 10 56 | 1 08 | 3 15 | 5 16 | 7 15 | 9 19 | 11 29 | 1 37 | 3 33 | 5 18 |
| 31 | 17 | வியா | 5 19 | 7 00 | 8 50 | 10 52 | 1 04 | 3 11 | 5 12 | 7 11 | 9 15 | 11 25 | 1 33 | 3 29 | 5 14 |
| ஏப் 1 | 18 | வெள் | 5 15 | 6 55 | 8 45 | 10 47 | 12 59 | 3 06 | 5 07 | 7 06 | 9 10 | 11 20 | 1 28 | 3 24 | 5 09 |
| 2 | 19 | சனி | 5 10 | 6 52 | 8 42 | 10 44 | 12 56 | 3 03 | 5 04 | 7 03 | 9 07 | 11 17 | 1 25 | 3 21 | 5 06 |
| 3 | 20 | ஞாயி | 5 07 | 6 49 | 8 39 | 10 41 | 12 53 | 3 00 | 5 01 | 7 00 | 9 04 | 11 14 | 1 22 | 3 18 | 5 03 |
| 4 | 21 | திங் | 5 04 | 6 45 | 8 35 | 10 37 | 12 49 | 2 56 | 4 47 | 6 56 | 9 00 | 11 10 | 1 18 | 3 14 | 4 59 |
| 5 | 22 | செவ் | 5 00 | 6 41 | 8 31 | 10 33 | 12 45 | 2 52 | 4 43 | 6 52 | 8 56 | 11 06 | 1 14 | 3 10 | 4 55 |
| 6 | 23 | புதன் | 4 56 | 6 37 | 8 27 | 10 29 | 12 41 | 2 48 | 4 39 | 6 48 | 8 52 | 11 02 | 1 10 | 3 06 | 4 51 |
| 7 | 24 | வியா | 4 52 | 6 33 | 8 23 | 10 25 | 12 37 | 2 44 | 4 35 | 6 44 | 8 48 | 10 58 | 1 06 | 3 02 | 4 47 |
| 8 | 25 | வெள் | 4 48 | 6 29 | 8 19 | 10 21 | 12 33 | 2 40 | 4 31 | 6 40 | 8 44 | 10 54 | 1 02 | 2 58 | 4 43 |
| 9 | 26 | சனி | 4 44 | 6 25 | 8 15 | 10 17 | 12 29 | 2 36 | 4 27 | 6 36 | 8 40 | 10 50 | 12 58 | 2 54 | 4 39 |
| 10 | 27 | ஞாயி | 4 40 | 6 21 | 8 11 | 10 13 | 12 25 | 2 32 | 4 23 | 6 32 | 8 36 | 10 46 | 12 54 | 2 50 | 4 35 |
| 11 | 28 | திங் | 4 36 | 6 16 | 8 06 | 10 08 | 12 20 | 2 27 | 4 18 | 6 27 | 8 31 | 10 41 | 12 49 | 2 45 | 4 30 |
| 12 | 29 | செவ் | 4 31 | 6 13 | 8 03 | 10 05 | 12 17 | 2 24 | 4 15 | 6 24 | 8 28 | 10 38 | 12 45 | 2 42 | 4 27 |
| 13 | **30** | புதன் | 4 28 | 6 08 | 7 58 | **10 00** | **12 12** | 2 19 | 4 10 | 6 19 | 8 23 | 10 33 | 12 41 | 2 37 | 4 22 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: பங்குனி 30உ (13-4-83) பகல் 11-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (10-00 — 12-12) மிதுன லக்னம்

# பங்குனி மாதக் கிரகநிலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் | |
| | சூரி குஜ | சுக் | | ராகு | |
| கும்பம் | புதன் | பங்குனி மாதக் கிரக நிலை | | | கடகம் |
| மகரம் | | | | | சிங்கம் |
| | கேது நெ. | யூரே குரு | சனி | | |
| | தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி | |

## கிரக மாற்றங்கள்

6உ (20-3-83) மாலை 6-15க்கு மீன-புதன்
13உ (28-3-83) பி. இ. 6-0 க்கு மேட-குஜ
21உ (4-4-83) மாலை 5 06 க்கு மேட-புத
25உ (8-4-83) காலை 7-24 க்கு இட-சுக்
2உ யுரேனஸ் வக்ராரம்பம்
15உ குரு ,,
17உ குஜன் மேற்கு அஸ்தமனம்
19உ நெப்டியூன் வக்ராரம்பம்
26உ புதன் மேற்கு உதயம்
சனி வக்ரத்திலேயே சஞ்சரிக்கிறார்

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பங் | 3உ. | (17-3-83) | காலை | 7-49 | முதல் | மேடம் |
| | 5உ. | (19-3-83) | பி.ப. | 2-24 | ,, | இடபம் |
| | 7உ. | (21-3-83) | இரவு | 7-18 | ,, | மிதுனம் |
| | 9உ. | (23-3-83) | இரவு | 10-30 | ,, | கடகம் |
| | 11உ. | (25-3-83) | இரவு | 12-19 | ,, | சிங்கம் |
| | 13உ. | (27-3-83) | பி.இ. | 1-43 | ,, | கன்னி |
| | 15உ. | (29-3-83) | பி. இ. | 3-58 | ,, | துலாம் |
| | 18உ. | (1-4-83) | பகல் | 10-00 | ,, | விருச்சிகம் |
| | 20உ. | (3-4-83) | இரவு | 7-21 | ,, | தனுசு |
| | 23உ. | (6-4-83) | காலை | 7-38 | ,, | மகரம் |
| | 25உ. | (8-4-83) | இரவு | 8-16 | ,, | கும்பம் |
| | 28உ. | (11-4-83) | காலை | 6-59 | ,, | மீனம் |
| | 30உ. | (13-4-83) | பி. ப. | 2-54 | ,, | மேடம் |

### கிரகநிலை குறிக்க:-

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி பங்குனி மீ 30 உ பகல் 11-00 மணிக்கு மிதுன லக்னம் என அறிந்து கொண்ட பின் மிதுனம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

### மாதபலன்

இம்மாதம் பொருளாதாரம் விருத்தியடையினும் செலவினங்கள் மேன்மேலும் அதிகரிக்கும். நாட்டில் அமைதிக்குறைவும், துணிகரமான வன்செயல்களும் தலைதூக்கும். கடற் பிரயாணத்தில் விபத்துக்களும், நாட்டு மக்கள் பலவகையிலும் பாதிப்படைதலும், உயர்கல்வி ஸ்தம்பிதமடைதலும், நீதித்துறைகள் செயல் குன்றுதலும், போக்குவரத்து வசதிகள் அதிகரித்தலும் உண்டாம்.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (பங்குனி மாதம் 1-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 6மணி 21 நிமிஷம்)

| வாரம் | 6...21<br>7...21 | 7...21<br>8...21 | 8...21<br>9...21 | 9...21<br>10...21 | 10...21<br>11...21 | 11...21<br>12...21 | 12...21<br>1...21 | 1...21<br>2 . 21 | 2...21<br>3...21 | 3...21<br>4...21 | 4.. 21<br>5...21 | 5.. 21<br>6...21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# பங்குனி மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

15-3-83 — 13-4-83

சூரியன்:- 15-3-83 நள்ளிரவு 12-15ல் (நிரயன) மீனராசிப் பிரவேசம்
15-3-83 உதயம் காலை 6-21
அஸ்தமனம் மாலை 6-18
21-3-83 மு.ப. 10-10ல் வசந்த (ருது) காலம் ஆரம்பம். வசந்த சம ராத்திரி தினம், (Vernal Equinox).
13-4-83 உதயம் கா. 6.06
அஸ்தமனம் மாலை 6-17

சந்திரன்:- 16-3-83 சந்திர தரிசனம்
22-3-83 பூர்வாஷ்டமி மு.இ. 7-00
28-3-83 பூரணை இரவு 12-57
6-4-83 அபராஷ்டமி பி.இ. 3-25
13-4-83 அமாவாசை பகல் 1—28

## கிரகங்கள்

புதன்:- சென்றமாதப் பிற்பகுதியில் கிழக்கில் அஸ்தமனமடைந்த இக்கிரகம் 26-3-83ல் சூரியனோடு சமாகமமாகி (Superior Conjunction) 8-4-83ல் மேற்கில் உதயமாகும். அதன்பின் மேற்கு வானில் அவதானிக்கவும். 20-3-83ல் மீன ராசியிலும் 4-4-83ல் மேடராசியிலும் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்:- மாசத்தொடக்கத்தில் சூர்யாஸ்தமத்தின்பின் மேற்கு வானத்தில் 30 பாகை உயரத்தில் பிரபையுடன் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 37 பாகை உயரத்தில் முன்னிலும் கூடிய பிரபையுடன் காணப்படும். 8-4-83ல் இடபராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்:- மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனத்தின் பின் மேற்குவானத்தில் 2பாகை உயரத்தில் மிகக்குறைந்த பிரபையுடன் காணப்படும் இக்கிரகம் 31-3-83ல் மேற்கில் - சூரிய சாமீப்பியத்தால் அஸ்தமனமாகிவிடும். 27-3-83ல் மேடராசியிற்பிரவேசிக்கிறது.

வியாழன்:- மாத ஆரம்பத்தில் சூர்யோதயம் முன் மேற்குவானில் 78பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 48 பாகை உயரத்தில் காணப்படும். 29-3-83ல் வக்கிரகதியிற் செலத் தொடங்கும். வக்கிரகதியிற் செல்வதை அதற்குத் தெற்கே காணப்படும் கேட்டை நட்சத்திரத்துடன் ஒப்புநோக்கியறியலாம். இம் மாதம் முழுவதும் விருச்சிகராசியில் கேட்டை 1-ம் பாதத்தில் சஞ்சரிக்கிறது.

சனி:- மாத ஆரம்பத்தில் சூர்யோதயம் முன் மேற்கு வானத்தில் 41பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் மாதமுடிவில் 9 பாகை உயரத்தில் காணப்படும். ஏற்கெனவே வக்கிரகதியிற் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் இம்மாதம் முழுவதும் வக்கிரகதியிலேயே சஞ்சரிக்கிறது. 15-3-83 இல் துலாராசியிற் சுவாதி 1-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus) 16-3-83ல் வக்கிரகதியடையும் இக்கிரகம் விருச்சிக ராசியில் அனுஷம் 4-ம் பாதத்திலும்.

வருணன் (Neptune) 2-4-83ல் வக்கிரகதியடையும் இக்கிரகம் தனு ராசியில் மூலம் 2-ம் பாதத்திலும்,

குபேரன் (Pluto) சென்ற மாதந்தொடக்கம் வக்கிரகதியிற் சென்று கொண்டிருக்கும் இக்கிரகம் துலாராசியிற் சித்திரை 4-ம் பாதத்திலும் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன.

## சமாகமங்கள்

16-3-83 மாலை சந்திரனுக்குவடக்குசெவ்வாய் 4½ பாகை சந்திர தரிசனத்துடன் அவதானிக்கவும்

17-3-83 பிற்பகல் சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் 4½ பாகை அஸ்தமனத்தின் பின் பார்க்கவும்.

30-3-83 முன்னிரவு சந்திரனுக்கு தெற்குசனி 2 பாகை சந்திரோதயத்தின் பின் விடியும் வரை அவதானிக்கலாம்,

2-4-83 மாலை சந்திரனுக்கு தெற்கு வியாழன் ½ பாகை. சந்திரோதயத்தின் பின் விடியும் வரையும் அவதானிக்கலாம்

குறிப்பு:- இம்மாத வானியற் கழகக்கூட்டம் 20-3-83 பிற்பகல் 4—30 மணிக்கு மேற்காட்டிய விலாசத்தில் கூடும்.

# திரு. உபாலி விஜயவர்த்தனா

வே. சின்னத்துரை — நல்லூர்

## உயிரோடிருக்கிறார்?

இவரின் பிறப்பு 17-3-38 காலை 8-45 கொழும்பு.

| | | | |
|---|---|---|---|
| சனி 13<br>வெ 13<br>பு 11<br>சூ 2 | செ 10<br>லக் 13<br>யு 18 | கே 7 | |
| | இராசி | | |
| வி 27 | | | நெ 26 |
| | ரா 7 | | சந் 14 |


| | | | |
|---|---|---|---|
| வெ 23<br>செ 15 | | | ரா 6 |
| சூ 23<br>பு 8 | இராசி | | |
| | | | |
| சந் 16<br>கே 6<br>நெ 5 | வி 16<br>யு 15<br>ல 0 | சனி 10 | |

| | | | |
|---|---|---|---|
| கே | | சந் | |
| | நவாம்சம் | | செ<br>சூ |
| | | | லக் |
| நெ | சனி | வெ<br>பு | வி<br>யு |

மகா தசை சேடம் சந்திரன் 6-8-12.

எனது முன்னைய (1979 சித்திரை இதழ்) கட்டுரையில் தீக்கோள்களும் அவற்றின் சேர்க்கையும் பற்றியதில் இவ் அகால மிருத்துக்கள் பற்றி மிகவும் தெளிவாக எழுதியிருந்தேன். அதாவது சனி, செவ்வாய் சந்திரன் ஒன்றுடன் ஒன்று சேர்க்கை கொண்டாலும் அவமிருத்து உண்டாகுமென்றும் விபத்து மரணங்கள் நிகழுமென்றும். இதோ இச்சாதகத்திலும் மீனத்தில் நிற்கும் சனி கன்னியில் நிற்கும் சந்திரனை 7-ம் பார்வையால் பார்ப்பதையும், ராகு விருச்சிகத்தில் செவ்வாயின் வீட்டில் நின்று தனது 9-ம் பார்வையால் சனியைப் பார்ப்பதையும், செவ்வாய் தனது 8-ம் பார்வையால் ராகுவைப் பார்ப்பதையும் காணலாம். அதோடு பாவச் சக்கரத்தில் மீனத்தில் செவவாய் இருப்பதையும் சனியும் செவ்வாயும் சேர்ந்து சந்திரனைப் பரஸ்பர பார்வை கொள்வதையும் காணலாம். ஆகையால் இவருக்கு ஒரு விபத்துச் சாவு வரவேண்டிய நிலைமையை உண்டாக்கவில்லையா?

இதை ஹோராசாரமுறையில் பார்ப்பதற்கு ஒரு புத்தகத்தைத் திருப்பினேன். வலது கைப் பக்கத்தில் 146-ம் பக்கம் வந்தது. இது விருச்சிகத்தில் 0 பாகை உதயம். இதை இலக்கினமாகக் கொண்டு 8-3-83-ல் இரவு 9-20க்கு கணித்த சாதகமே மேலே காணப்படுவது. இச் சாதகத்திலும் இத்தீக்கோள் சேர்க்கைகள் அப்படியே அமைந்திருப்பதை நோக்குங்கள். துலாத்தில் ராகுவின் நட்சத்திரத்திலிருந்த சனி வக்கிரம் பெற்று தனுவில் நிற்கும் சந்திரனை 3-ம் பார்வையால் நோக்குவதையும் இச்சந்திரன் மீனத்தில் நிற்கும் செவ்வாய்க்கு கேந்திரமெய்துவதையும், செவ்வாய் தன் 8-ம் பார்வையால் சனியை நோக்குவதையும் காணலாம். இத்தீக்கோள்கள் உறையும் வீட்டின் தத்துவங்களைப் பாருங்கள்; துலாம் ஒரு வாயு வீடு. தனு ஒரு தேயு வீடு மீனம் ஒரு ஜல வீடு. செவ்வாய் வெள்ளியுடனுறைவதால் விமானத்தில் சென்றவர் தீயினாலும் ஜலத்தினாலும் மரணமானார் என்பதைக் காட்டுகிறது. ஒருவருடைய ஆயுளை திட்டவட்டமாக ஒருவராலும் கணிக்கமுடியாது. ஆனாலும் கிட்டத்தட்ட எவ்வளவு என்று சொல்ல முடியும். இச்சக்கரத்தின்படி இவருக்கு ஆயுள் 49 என வருகிறது. இவர் 45 வயதிலேயே அகால மரணத்திற்குள்ளாகியிருக்கலாம். இச்சாதகத்தின் படி இப்போ இவருக்கு வெள்ளி தசையில் 14-6-9 இருக்கிறது. இங்கு வெள்ளி மாரகாதிபதி. ஆகையால் இவர் வெள்ளி தெசையிலேயே மரணமானார் என ஊகிக்கலாம்.




## டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் A. F. A.

### 15-3-83 முதல் 13-4-83 வரை

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா திர்ணயத்தை ஒட்டியே ஏறக் குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத் தட்ட ஒருவரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித் துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

**அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்**

மேடராசியினர்க்கு சூரியன் 12-ம் ராசியில் லோகமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வது நன்றல்ல. அத்துடன் அட்டமத்து வியாழனின் சுகக்குறைவும் கஷ்டங்களை அதிகரிக்கும். இம்மாதம் தன வருவாய் குறைவாகவிருக்கும். வங்கிநிலை சீரடையாது. உங்கள் ஆரோக்கியத்தை மாதபிற்பகுதியிலிருந்து பாதுகாக்கவேண்டும். வீண் பிரயாணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம். எதிர்வர்க்கத்தால் கஷ்டங்களை சனீஸ்வரன் வழங்குவார். வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி வாழும்படி கிரகங்கள் உங்களை எச்சரிக்கின்றன. அப கீர்த்திகள் ஏற்படலாகும்.

குடும்பஸ்தர்கட்கு நன்றல்ல. 7ல் சனி வக்கரிப்பதும் 12ல் செவ்வாய் சனியுடன் சஞ்சாரம் செய்வதும் இல்லற வாழ்வில் குழப்பங்களை ஏற்படுத்த இடமுண்டு.

வியாபாரிகட்கு புதனின் சஞ்சாரம் மிகவும் நன்று. இதனால் உங்கள் வியாபாரம் விருத்தியுடன் லாபமீட்டினாலும், குருவின் சஞ்சாரத்தால் அதிக செலவுகள் ஏற்படுதலும், பணமுடையும் ஏற்படும். வங்கித் தொடர்புகள் கஷ்டமடையும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் குருவுக்கு நற்பார்வையில் சஞ்சரிப்பதால் கஷ்டங்கள் இல்லை ; இருப்பினும் மேலதிகாரிகளுடன் அவதானமாக நடக்கவும். சேர்ந்தவர்களால் மறைமுகமாக சில மனத்தாங்கல்கள் ஏற்படலாம்.

விவசாயிகட்கு 7ல் சனி வக்கிரகதியில் சூரியனுக்குக் கெட்ட பார்வையிலிருப்பதால் நன்மையில்லை. கூட்டுறவு விவசாயிகட்கு கஷ்டங்கள் அதிகரிக்கும்.

தொழிலாளர்கட்கு கடினமான மாதம். முதலாளிகளுடன் மனக்கசப்புகள் உண்டாகும். கூட்டுறவுத் தொழிலாளர் அதிகம் தாக்கப்படுவர்.

மாணவர்கட்கு நல்ல மாதம். ஜன்மராசியில் சுக்கிரனும, 11ல் புதனின் நற்சஞ்சாரமும் அதிக நற்பலனைத்தர இருக்கின்றது. தூரதேசக்கல்விக்கு உகந்தமாதம்.

பெண்கட்கு சுக்கிரனின் சஞ்சாரம் மிக விசேடம். காதலில் ஈடுபட்ட பெண்கட்கு நன்றல்ல. குடும்பப்பெண்கள் நன்மையடைவர்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 28, 29, ஏப் 9, 10.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 15, 16, ஏப் 1 பி.ப. 2,3 மு.ப. 11,12,13 மு.ப.




கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2 கால்

இவர்களுக்கு சூரியபகவான் தன் விசேடமான 11-ம ராசியில் சுவர்ணமூர்த்தியாகச் சஞ்சாரம் செய்வதும், வியாழன், சனியின் நற்சஞ்சாரங்கள் சிறந்தபலனை, உயர்ந்த அந்தஸ்தை பெருத்த வருவாயை, நினைத்த கருத்தை நிறைவேற்றுவதையும், கிரகங்களால் வெற்றியையும் பகிர்ந்தளிக்கும். செவ்வாயின் சஞ்சாரத்தால் சேர்ந்தவர்களுடன் சில பல பிரச்சனைகள் தோன்றிமறையும். இம்மாதம் தெய்வகடாட்சம் நிறையஉண்டு. நிதிநிலை சிறப்படையும்.

குடும்பஸ்தர்கட்கு சகல சௌக்கியங்களும் கிட்டும். புத்திரர்களால் சுபம் கிடைக்க இடமுண்டு. சுபகருமங்கள், வெற்றிச்சம்பவங்கள், பணவருவாய் என்பன உண்டுபண்ணும்.

வியாபாரிகட்கு புதனின் சஞ்சாரம் சிறந்த பலனைத்தரும். இம்மாதம் உங்கட்கு அதிவிசேடமானமாதமென்றே கூறலாம்.

உத்தியோகத்தர்கட்கு உயர்வு உண்டு. மேலதிகாரிகளின் நன்மதிப்புக் கிடைக்கும். நன்மாற்றங்களுக்கு எத்தனித்தால் வெற்றிகிட்டும். அரசியல்வாதிகளானாலும் போற்றப்படுவீர்கள்.

விவசாயிகட்கு சனிபகவான் 6-ம் இடத்தில் நற்பலன் தரக்காத்திருக்கிறார். புதுப்பயிரிடுதல் புது விவசாயக்காணிகள் சேர உகந்த மாதம். அறுவடையினால் லாபங்கள் காட்டுகின்றது.

தொழிலாளர்கட்கு சிறப்பான மாதம், செய்தொழிலில் முன்னேற்றமும், லாபமும் கிட்டும். கூட்டுறவுத் தொழிலாளருக்கு மேலதிக நன்மைகள் காட்டுகின்றது.

மாணவர்கட்கு மிக விசேடமான மாதம். பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்கட்கு சித்தி கிட்டும்.

பெண்கட்கு மிகநல்ல மாதம். காதலர்கட்கு விவாகம் நடைபெறும். குடும்பப் பெண்கட்கு கணவன்மாரால் செழிப்பும், சிறப்பும் கிடைக்கும். காதல் விவாகத்தில் முடிவடையும். புத்திரோற்பத்திக்கு உகந்த மாதம்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 15, 16, 30, 31, ஏப் 1 மு.ப, 11,12, 13 மு.ப.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 17, 18, 19 மு.ப, ஏப் 3 பி.ப, 4, 5, 13 பி. ப.




மிருகசீரிடம்2,3, திருவாதிரை,புனர்பூசம் 1,2,3 கால்

மிதுனராசியில் பிறந்தோர்க்கு சூரியன் 10-ம் ராசியில் தாம்ர மூர்த்தியாக சஞ்சாரம் செய்வதும், சூரியனை வியாழன் நோக்குவதும் முன்னேற்றங்களுக்கு வழிவகுக்கும். இம்மாதம் தொழில் விருத்தியும், நிர்வாகத் திறனும், கடின உழைப்பும், முன்னேற்றத்திற்கு சிறந்த வழிகளைக் காட்டும். ஆரோக்கியம் சிறப்பாக இருப்பினும் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய சந்தர்ப்பங்களைக் காட்டுகின்றது. சேர்ந்தவர்களால் பல நன்மைகள் வந்தடையக் காத்திருக்கிறது.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப வளர்ச்சி சமமாக இருக்கும். உறவினர் கொடுக்கல் வாங்கல்களில் சில பல கஷ்டங்கள் தீர்த்து வைக்கப்படும். புத்திரரால் அதிக சிறப்பில்லை. பணத் தின்டாட்டம் உண்டு.

வியாபாரிகட்கு மிகச் சிறப்பான மாதம். வியாபாரி புதன் நற்சஞ்சாரம் செய்வது பெருத்த லாபங்களையும், முன்னேற்றங்களையும் உண்டு பண்ணும். லாபம் அதிகரித்துக் கொண்டே போகும். புது முதலீடுகளில் துணிந்து இறங்குவீர்கள்.

உத்தியோகத்தர்கட்கு அதிக பாதிப்பில்லை. நிர்வாகத்துறையில் கடமைபுரிவோர் பாராட்டப்படுவர். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு உங்கட்கு மிக நன்மையளிக்கும்.

விவசாயிகட்கு நீண்டகாலப் பயிர்கள் பயிரிட நல்ல மாதம். உழைப்புக்கேற்ற ஊதியம் கிட்டாவிடினும் முன்னேற்றமடைவீர்கள். பழைய காணிகளில் முதலீடு செய்ய நல்ல மாதம்.


தொழிலாளர்கட்கு வெற்றியுண்டு. வேலைப் பொறுப்பு அதிகரிக்கும்.. புதுத்தொழில் ஆரம்பிக்க உகந்த மாதம். கொந்தராத்து தொழிலாளருக்கு அதிக சிறப்புத் தரும்.

மாணவர்கட்கு மிக நன்று. தூரதேசக் கல்விக்கு நல்ல வழி பிறக்கும். பரீட்சைகளில் வெற்றி கிட்டும். மாதபிற்பகுதி மிகச் சிறந்த பலனைத் தரும்.

பெண்கட்கு அதிவிசேடமான மாதம். முதியோரால் சில பற்றுக்கேடுகள், விரக்தி ஆகியவற்றைக் கொடுத்தாலும், நீங்கள் எடுத்தகருமங்களில் வெற்றியடைவீர்கள். காதலர்கட்கு வெற்றி களிப்படைவீர்கள்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 17, 18, 19, பி.ப.
ஏப் 1 பி.ப,2,3மு,ப,13 பி.ப.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 19 பி.ப. 20,21 மு.ப.
ஏப் 6, 7, 8.




புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இவ்விராசியினர்க்கு சூரியபகவான் 9-ம் ராசியில் ராஜதமூர்த்தியாகச் சஞ்சரித்தாலும் குருவின் நற்பார்வையினுல் சிறந்தபலன் உண்டாகும். 5ல் குரு முயற்சிகளை ஊக்குவித்து நற்பலனைக்கொடுத்துக்கொண்டே இருக்கும். புத்திரரால் பல நன்மைகள் உண்டாகும். தூரதேசப் பிரயாணங்கட்குச் சிறந்த மாதம். மாத பிற்பகுதி பலபிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும்.

குடும்பஸ்தர்கட்கு மிக நல்லமாதம். புத்திரர்களால் நன்மை அதிகரிக்கும்' சுபகருமங்கள் உண்டாகும். களத்திர சுகமும் நன்றாக இருக்கும். இனபந்துக்களால் பெருமைகள் உண்டாகும்.

வியாபாரிகட்கு முதலீடு சிறக்கும். நிதிநிலை, வங்கிநிலை பெருகும். புது வியாபாரங்கள் ஆரம்பிக்கவும், வெளிநாட்டு வியாபாரங்களில் ஈடுபடவும் மிகவும் சிறந்த மாதம்.

உத்தியோகத்தர்கட்கு உத்தியோக உயர்வு, நன் மாற்றம், நன் மதிப்பு ஆகியன உண்டாகும். மேலதிகாரிகளால் நன்மை ஏற்படலாகும்.

விவசாயிகட்கு 4ல் சனி வக்கரிப்பது நன்றல்ல. களவுகள் ஏற்படலாம். புதுப்பயிர்கள் நாட்ட உகந்த மாதம். எல்லைப் பிரச்சினைகள், தண்ணீர்ப்பிரச்சினைகள் உருவாகும்.

தொழிலாளர்கட்கு அதிக சிறப்பில்லையெனினும், பழைய தொடர்புகளால் நன்மையடைவீர்கள். சனியின் சஞ்சாரம் உங்களை மந்தமாக்கும்.

மாணவர்கட்கு மாத பிற்பகுதியில் சிறந்த பலன் காத்திருக்கிறது. 5ல் புதன் புலமைப்பரிசில்கள் பெறநன்று.

பெண்கட்கு மிகச் சிறப்பான மாதம். சுக்கிரனின் சஞ்சாரம் காதலில் வெற்றியையும், முன்னேற்றத்தையும் கொடுத்து மகிழ்விக்கும். காதலில் ஈடுபட்ட கன்னிப்பெண்கள் விவாகத்தில் வெற்றிகாண்பீர்கள்.

அதிஷ்ட நாட்கள்:- மார் 19பி.ப, 20, 21மு.ப.
ஏப் 3பி.ப, 4, 5.

துரதிஷ்ட நாட்கள்:- மார் 21பி.ப, 22, 23.
ஏப் 9, 10.




மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

இவ்விராசியினர்க்கு அட்டமத்துச் சூரியன் வேலாகமூர்த்தியாக செவ்வாயுடன் சஞ்சரிப்பதும், 3-ல் சனியும் துயரம் தரும். நீங்கள் இம்மாதத்தைச் சாதுரியமாகக் கழிக்கவேண்டும்.

அன்றேல் பல பிரச்சினைகளில் அவமானங்களில் மாட்டிக்கொள்வீர்கள். இம்மாதம் பல விபத்துக்களும் ஏற்படலாம்.

குடும்பஸ்தர்கட்கு அதிக கஷ்டமில்லை. 4-ம் ராசியில் குருவின் சஞ்சாரம பிரச்சினைகளைப் பெருகவிடாது காத்துக்கொள்ளும். புத்திரர்களால் அதிக சிறப்புகளை எதிர்பார்க்க முடியாது.

வியாபாரிகட்கு அதிக நற்பலன் இல்லை. புதன் சஞ்சாரம் மாதப்பகுதியில் பலகஷ்டந்தரும். கள்ளமார்கட் வியாபாரிகட்கு நற்பலன் உண்டு.

உத்தியோகத்தர்களுக்கு ஆபத்தானமாதம். சூரியபகவான் லோகமூர்த்தியாக அட்டமராசியில் செவ்வாயுடன் சஞ்சரிப்பது நன்றல்ல. உங்கள் நற்பெயரைக்காத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

விவசாயிகட்கும் அப்படியே. விவசாயி சனி 3-ம் ராசியில் வக்கிரகதியில் செல்வது நன்றல்ல. விவசாய விருத்திமந்தமாகவே இருக்கும்.

தொழிலாளர்கட்கு பல கஷ்டங்கள். ஏற்படும் கூட்டுறவுத் தொழிலாளர் அதிக கஷ்டம் அனுபவிக்க வேண்டி வரும். கொந்தராத்துத் தொழிலாளர்கட்கு மேலதிக நஷ்டங்கட்கு வழி வகுக்கும்,

மாணவர்கட்கு நன்றல்ல. விளையாட்டுக்கள் ஊக்கமளிக்காது. கல்வியிலும் சிறப்பு இருக்காது. வெளிநாட்டு புதுக்கல்வி கற்கப் பிரயாணம் செய்யச் சிறந்த மாதம்.

பெண்கட்கு நன்றில்லை. விவாகமானவர்கள் கணவன்மாரோடு சதா பிரச்சினை கொள்வர், கன்னிப் பெண்கட்கும் நன்மை கிட்டாது. காதலில் ஈடுபட்டவர்கட்கு நற்பலன் காட்டுகின்றது.

அதிஷ்ட நாட்கள்; மார்ச் 21 பி. ப. 22, 23, 6, 7, 8,
துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 15, 16, 24, 25, ஏப் 11, 12, 13 மு. ப.




**உத்தரம் 2-3-4, அத்தம், சித்திரை 1, 2-ம் கால்**

இவர்களுக்கு சூரியன் சுவர்ணமூர்த்தியாக 7-ம் இடத்தில் பவனி வருவதால் நற்பலன்கள் அதிகரிக்கும். 3-ல் வியாழனுல் சகோதர உதவிகள் கிடைக்கும் 7-ல் செவ்வாயால் திட்டமிட்ட கருமங்கள் குழப்பமடையினும் இறுதியில் வெற்றி கிடைக்கும். சனி 2-ல் இருப்பது கஷ்டங்கள் குறைய ஏதுவாகும். பொருள் பண்டங்கள் தேட தொழில் முன்னேற்றம் காண சில வழிவகைகள் படிப்படியாக உதயமாகும். ஆரோக்கியம் சீராகவிருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு 4-ல் கேது நெப்டியூன் சேர்க்கையால் அமைதிக்குப் பங்கம் ஏற்படினும் சூரியன் களத்திர இன்பத்தைக் கொடுத்து மனச் சந்தோஷமடைய வைப்பார். புத்திரசுகம் சிறப்பாகவிருக்கும்.

வியாபாரிகளுக்கு வியாபாரம் மிகச்சிறப்பாக நடைபெறும். வேண்டிய முதலீடுகள் செய்யலாம். கடன்பாக்கிகள் வந்து சேரும். எதிரிகளை வெற்றிகொள்ளலாம். பங்கு வியாபாரிகள் சிக்கல்களைக் கொடுப்பினும் உங்கள் பக்கம் வெற்றியுண்டு.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் மூர்த்தி பலமடைவதால் காரியசித்தி உண்டு. நன்மாற்றங்கள் கிடைக்கும். காரியாலயத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். சகாக்களுடன் குதூகலமாக உலாவித்திரிவீர்கள்.

விவசாயிகட்கு சனி 2-ல் இருப்பினும் பயிர்ச் செய்கைபாதிக்கமாட்டாது. தானியவகைகள் சிறந்த பலனைத்தரும். சூரியன் சோம்பலை நீக்கி உற்சாகம் தருவார். புதுக்காணி, நிலம் வாங்க வாய்ப்புகளுண்டு.

தொழிலாளர்கட்கு தொழில் வாய்ப்புகள் வந்த வண்ணமிருக்கும். எதிரிகள் தலை வணங்குவர். கூட்டுறவில் நல்ல லாபமுண்டு. 7-ல் செவ்வாயால் பங்குத்தொழில் அதிக லாபமில்லை.

மாணவர்கட்கு எவ்வகைக் கல்வியிலும் அதிக சிரத்தையேற்படும். தொழில் தேடுவோர் வாய்ப்புகளை நழுவவிடாது பார்த்துக்கொள்ளவும்.

பெண்களுக்கு கணவனின் வளர்ச்சியால் மனம் பூரிப்படையும். தொழில் பார்ப்போர் மேலும் சலுகைகள் பெறுவர். காதலிப்போர் விவாகம் செய்துகொள்ளும் சாத்தியமுண்டு. கலாச்சாரத்திற்கு மாறுன வகையில் கருமங்கள் செய்யத்தூண்டும். அவதானமாக விருக்கவும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 24,25, ஏப் 9, 10.
துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 17, 18, 19 மு.ப. 26, 27. ஏப் 13 பி. ப.




**சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் கால்**

துலா ராசியிற் பிறந்தவர்கட்கு சூரியன் 6-ல் இரஜத மூர்த்தியாகச் சஞ்சரிப்பதால் எவ்வித குறையுமில்லை. ஜன்ம ராசிச்சனி, தன ஸ்தானத்தில் வியாழன் ஆகியன எண்ணிய கருமங்கள் நிறைவேற வழி வகுக்கும். 6ல் செவ்வாய் ஆரோக்கியக் குறைவைத் தரினும் பகைவர்களை வெற்றி கொள்ள உதவும். அயலவர்களிடையே உங்கள் அந்தஸ்து உயர்வடையும். உங்கள் சேவையில் மனத்திருப்தி ஏற்படும். 9-ல் ராகுவால் அந்நிய சகாயங்கள் கிடைக்கப்பெறும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பத்தில் நற்கருமங்கள் நடைபெறும். இனத்தவர் உதவியுடன் காரியங்கள் சிறப்பாக நடந்தேறும். புத்திர சம்பந்தமான நற்செய்திகள் கிடைக்கும். பணவருவாய் திருப்தியளிக்கும், 7-ல் சுக்கிரனல் வாழ்வு வளம் பெறும்.

வியாபாரிகட்கு வர்த்தக ரீதியில் வசதிகள் உருவாகும். முதலீடுகள் லாபம் தரும். கூட்டு வியாபாரிகளின் கையோங்கும். அயல் வியாபாரிகள் சூழ்ச்சியிலீடுபட்டுத் தோல்வியுறுவர். பெண்கள் விரும்பும் பொருட்களின் வியாபாரம் அதிக லாபம் தரும்.

உத்தியோகத்தர்கட்கு சேவையில் திருப்தி கிடைக்கும். இரகசிய எதிரிகள் தொல்லை தரினும் வெற்றி கொள்ளலாம். கந்தோர் உங்கள் சேவையிலேயே இயங்குவதாக ஓர்வித உணர்வு ஏற்படும்.

விவசாயிகட்கு சனி கடின உழைப்பின்மேல் லாபத்தைத் தரும். 2-ல் யுரேனஸ் விவசாயத்தில் புரட்சிகர முன்னேற்றத்தைக் கொடுக்கும். காணித் தகராறுகளில் சாதகமான முடிவேற்படும்.

தொழிலாளர்கட்கு ஒன்றன்பின் ஒன்றாகத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். உற்சாகம் அதிகரிக்கும். தொழில் ரீதியான போட்டிகளை வெற்றி கொள்ளலாம். பொருள்பண்டச் சேர்க்கைக்கு சாதகமான காலம்.

மாணவர்கட்கு ஞாபக சக்தி அதிகரிக்கும். சட்டத்துறை, கணிதத்துறையில் கல்வி பயில்வோர் அதிக நன்மையடைவர். கலை, விளையாட்டுக்களில் புகழீட்டுவர். அந்நிய சகாயங்கள் மேற்படிப்புக்கு உதவியாகவிருக்கும்.

பெண்களுக்கு காதலில் வெற்றி, புதுக் காதலர்கள் உருவாகுதல், தாம்பத்திய சுகம், போன்ற பலன்கள் சாதாரணமாக ஏற்படும். விவாகப் பேச்சுக்கள் வெற்றி தரும். தொழில் பார்க்குமிடத்தில் காதல் அரும்பும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 15, 16, 26, 27, ஏப் 11, 12, 13 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 19 பி. ப, 20, 21மு.ப. 28, 29.




**விசாகம் 4-ம் கால், அனுஷம், கேட்டை**

இந்த ராசியில் ஜனனமானவர்கட்கு சூரியன் 5ல் லோகமூர்த்தியாக சஞ்சாரம் செய்வதால் நற்பலன்கள் கிடைப்பதற்கில்லை. ஜன்மராசியில் வியாழனைத்தவிர ஏனைய கிரகசாரங்கள் சாதகமாக இல்லை. எண்ணிய கருமங்கள் தடைப்படல் அலைச்சல், அவமரியாதை என்பவற்றால் மனம் சோர்ந்துபோகும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். அரசியல் ரீதியில் தொல்லைகள் உருவாகும். ஜன்மராசியில் யுரேனஸ் அசட்டுத் துணிவைக் கொடுத்து கஷ்டத்தில் மாட்டிவைக்கும்.

குடும்பஸ்தர்கட்கு வாக்கு ஸ்தானத்தில் கேது நெப்டியூன் புத்திர ஸ்தானத்தில் செவ்வாய், சூரியன் என்பன இல்லற சுகம், புத்திர சுகம் ஆகியன கிடைக்கவிடாது தடைபண்ணும். நிதானம் தவறுவதால் குடும்பப் பிரச்சனைகள் உருவாகும். குடும்ப கௌரவம் பாதிப்படையும்.

வியாபாரிகட்கு எவ்வகை வியாபாரமும் நஷ்டத்தையே தரும். வங்கி வசதிகள் கிடைக்காது. கள்ளமார்க்கட்டில் கஷ்டங்கள் தோன்றும். பங்கு வியாபாரிகள் பிரிவினை காண்பர்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன் பலவீனமடைந்திருப்பதால் கஷ்ட பலன்கள் உருவாகும். மேலதிகாரிகளின் தொல்லைகள் வேலைப்பழுவை அதிகரிக்கும். அன்பாக நடந்தவர்கள்கூட பகைமை அடைவர். கடமையில் குற்றம் குறையை எதிர் பார்க்கலாம்.

விவ்சாயிகட்கு பயிர்ச்செய்கையில் அளவு கடந்த நஷ்டம் ஏற்படும். வயல் தோட்டவேலைகள் குறித்த வேளையில் செய்யமுடியாது இடைஞ்சல்கள் ஏற்பட்டவண்ணமிருக்கும்.


தொழிலாளர்கட்கு செய்தொழில் வளர்ச்சியுருது. அலைச்சலின்மேல் அலைச்சல் ஏற்படும். ஒப்பந்தங்களில் தகராறுகள் தோன்றும். புதிய ஒப்பந்தங்களைத் தவிர்த்தல் நன்று.

மாணவர்கட்கு கல்வி வசதிகள் குறைவடையும். பரீட்சைகளில் சித்தி கிடைப்பது கஷ்டம். அளவுக்கதிகமான விளையாட்டுக்களால் சோம்பல் ஏற்படும். அறிஞர்களின் உதவி சிறிதளவுகிடைப்பினும் கல்வியில் முன்னேற்றமில்லை.

பெண்களுக்கு காதலில் தோல்வி, விவாகப் பேச்சுக்கள் தடைப்படல், எண்ணிய கருமங்களில் குழப்பம் போன்ற தீயபலன்களே ஏற்படும். கர்ப்பிணிகளுக்கு தேகாரோக்கியம் பாதிப்படையும். வரவுக்கு மிஞ்சிய செலவு கஷ்டத்திற்குள்ளாக்கும்.

அதிஷ்ட நாட்கள்:- மார்ச் 17,18,19மு.ப,28,29, ஏப் 13பி.ப.

துரதிஷ்ட நாட்கள்:- மார்ச் 21பி.ப,22,23,30,31, ஏப் 1மு.ப.




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுசு ராசியைச் சார்ந்தவர்கட்கு சூரியன் தாம்ரமூர்த்தியாக 4-ல் வலம் வருவதால் அமைதிக்குச் கெடுதல் ஏற்படும். இனத்தவர்களிடையே எதிர்பாராத வகையில் மனவேறுபாடுகள் உருவாகும். தேகசுகம் சீர்கெடும். பணச் செலவுகள் அதிகரிப்பால் கவலையேற்படும். பிரயாணங்கள் நன்மையளிப்பதாக இல்லை. காணி, பூமி சம்பந்தமான சிக்கல்கள் உருவாகும். சுற்றுடலில் சண்டை, சச்சரவுகள் தோன்றும்.

குடும்பஸ்தர்கட்கு சனி 11-ல் உச்சமடையினும் இல்லற சுகம் கிடைப்பதற்கில்லை. களத்திர புத்திர வழிகளில் நஷ்டமேற்படும். நற்கருமங்கள் தடைப்படும். பொருள் இழப்புக்கள் ஏற்படலாம்.

வியாபாரிகட்கு வியாபார ஸ்தலத்தில் குழப்பமேற்படும். வங்கி உதவிகள் கிடைப்பதரிது. வெளிநாட்டு வர்த்தகம் பாதிப்படையும். பங்கு வியாபாரம், கள்ள மார்க்கட் வியாபாரம் என்பன தலையிடியை உண்டுபண்ணும்.

உத்தியோகத்தர்களுக்கு கவலைக்கிடமான மாற்றங்கள், தண்டனைகள் கிடைக்கலாம். சகாக்கள் உங்களுடன் ஒத்துழைக்க மறுப்பர். எவ்வகையிலும் இம்மாதம் மனநிம்மதி கிடைப்பதற்கில்லை. கடின உழைப்பால் நிலைமையைச் சமாளித்துக் கொள்ளலாம்,

விவசாயிகட்கு சனி லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் அதிக நஷ்டங்கள் ஏற்பட விடமாட்டார். வழக்கு விவகாரங்கள் பின்தள்ளப்படும். பண்ணை விவசாயிகட்கு இலாபம் குறைவாக்கிடைப்பதால் மனச்சோர்வு ஏற்படும்.


தொழிலாளர்கட்கு கடின உழைப்பு ஏற்படும். ஒப்பந்தங்கள் நஷ்டம் தரும். சக தொழிலாளர் ஒத்துழைப்பு தர மறுப்பர். புதுத் தொழில்களைச் சிறிது காலம் தாழ்த்தி ஆரம்பித்தல் நன்று.

மாணவர்கட்கு கல்வியில் முன்னேற்றமில்லை. பரீட்சைகளில் சித்தி கிடைப்பதரிது. வெளிநாட்டுக் கல்வியில் தடங்கல்கள் ஏற்படும். சுலாசாலையில் அமைதியின்மை ஏற்படும்,

பெண்களுக்கு 5-ல் சுக்கிரனால் காதல் எண்ணங்கள் தலைதூக்கினும் நிறைவேறுவது கஷ்டம். விவாக முயற்சிகள் இழுபறி நிலையிலிருக்கும். கணவனின் முன்னேற்றம் பாதிக்கப்படும். தொழில் பார்ப்போரின் அந்தஸ்து வீழ்ச்சியடையும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 19 பி.ப. 20, 21 மு.ப, 30, 31, ஏப் 1 மு. ப,

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 24, 25, ஏப் 1 பி. ப, 2, 3 மு. ப,




உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம்1,2

மகரத்தை ஜன்மராசியாக உடையவர்களுக்கு சூரியன் 3ல் இரஜத மூர்த்தியாக பவனி வருவதால் தொடர்ந்து நன்மையான பலன்கள் ஏற்படும். தொழில் வசதிகள் பெருகும். பிறதேச நட்புறவுகள் வளர்ச்சியடையும். பணமுடை குறை

வாகவிருக்கும். உறவினர் மூலம் நற்கருமங்கள் கைகூடும். ஆரோக்கியம் சீராகவிருக்கும். பிர யாண வசதிகள் அதிகரிக்கும். வீடு கட்ட, சீர் திருத்தம் செய்ய சாதகமான காலம். முதியோர் உதவி தாராளமாகக் கிடைக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன், சனி 9-ல் உச்சமடைவதால் அன்றாட பணிகள் திறம்பட நடைபெறும். தனவரவு நன்றாகவிருக்கும். 4-ல் சுக்கிரனால் மனை, வாகனாதி சுகங்கள் கிடைக்கும். அயலவரிடையே சிறு பிரச்சினைகள் தோன்றினும் கவலை கொள்ள வேண்டியதில்லை.

வியாபாரிகட்கு வியாபார விருத்தியுண்டு. தேங்கிக்கிடந்த பொருட்கள் விற்பனையாகும். முதலீடுகள் போதியலாபம் தரும். வியாபார விஸ்தரிப்புகள் சிறப்பாக நடைபெறும்.

உத்தியோகத்தர்கட்கு மிகவிசேஷமான காலம். கந்தோரில் செல்வாக்கு அதிகரிக்கும். பணவசதிகள் பெருகும். உயரதிகாரிகளின் கருணையுண்டு. அரச உதவிகள் கிடைக்கும்.

தொழிலாளர்கட்கு சனி 10-ல் உச்சம் பெறுவதால் தொழில் வளம் பெருகும். புதுத்தொழில்கள், ஒப்தந்தங்கள் வந்து குவியும். கூட்டுறவில் அதிக நன்மை கிடைக்கும். முதலாளிகள் சாதகமாக நடந்து கொள்வார்.

விவசாயிகட்கு விவசாயி சனி 10-ல் பலவிதத்திலும் நன்மையளிக்கும். தானிய நடுகை முதல் விற்பனைக்குச் செல்லும் வரை சாதகமான காலம். விவசாய ரீதியிலான கந்தோர் அலுவல்கள் அனுகூலமாகும். சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தவும்.

மாணவர்கள் தடை தாம்தங்களை வெற்றி கொண்டு கல்வியில் முன்னேற்றம் காண்பர். கலாச்சார நிகழ்ச்சிகளில் மதிப்புயரும். பட்டம் பதவிகள் கிடைக்கும். விஞ்ஞானத்துறை சிறந்த பலன் கிடைக்கும்.

பெண்களுக்கு விவாகமுயற்சிகள் கைகூடும், கணவனின் முன்னேற்றம் கண்டு பூரிப்படைவீர்கள். காதல் விவகாரங்கள் உங்களை நாடிவரும். திருப்தியான கணவன் கிடைப்பான். ஆடை, ஆபரணச் சேர்க்கையுண்டாகும்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 21பி.ப, 22, 23
ஏப் 1 பி. ப, 23 மு ப.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 26, 27,
ஏப் 3 பி. ப, 4, 5.




அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்

இவ்விராசியினர்க்குச் சூரியபகவான் சுவர்ண மூர்த்தியாக 2-ல் பவனி வந்துகொண்டிருப்பதால் தொட்ட கருமங்களனைத்தும் வெற்றியளிக்கும். நீண்டகாலப் பிணக்குள்முடிவடையும். பணச் செலவுகள் அதிகரிப்பினும் அதற்கேற்ப வருமானமும் உயர்வடையும். பிரயாணத்திலிருந்த தடைகள் நீங்கும். தூரதேச உறவுகள் வலுவடையும். வாய்ச்சண்டைகள், கருத்து மோதல் என்பன ஏற்படினும் சமாளித்துக் கொள்ளலாம். தேகசுகம் சீராகவிருக்கும்.

குடும்பஸ்தர்கட்கு இல்லறம் இனிதே நடக்கும். சமூகத்தில் அந்தஸ்து உயரும். னத்தவர் சேர்க்கை மகிழ்ச்சியைத் தரும். புத்திரச் சிறப்புண்டு. வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

வியாபாரிகட்கு ஜன்ம, தன ஸ்தானங்களில் புதன் பலம் பெறுவதால் வியாபாரம் லாபகரமாக நடக்கும். வங்கி வசதிகள் அதிகரிக்கும். கள்ள மார்க்கட் வியாபாரம், பங்கு வியாபாரம் என்பன பாதிப்பின்றி நடைபெறும்.

உத்தியோகத்தர்களுக்கு நினைத்த கருமங்கள் நிறைவேறும். வசதிகளுடன் கூடிய மாற்றங்கள் விரும்பியவாறு பெற்றுக்கொள்ளலாம். பதவியுயர்வு அதிகாரிகளிடையே செல்வாக்கு என்பன ஏற்படும். சகாக்கள் அடங்கி நடப்பர்.

விவசாயிகட்கு 9-ல் சனி தானியச் சேகரிப்புக்கு நன்கு உதவும். விவசாயத்துறையில் புகழாரம் கிடைக்கும். பட்ட கஷ்டங்களுக்கு நிவாரணம் கிட்டும் துணிவுடன் எவ்வகைப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபடலாம்.

தொழிலாளர்கட்கு உழைப்பிற்கேற்ற ஊதியமுண்டு. குறித்தபடி வேலையைக் காலக்கிரமத்தில் செய்து முடிக்து நற்பெயர் வாங்குவீர்கள். புது ஒப்பந்தங்கள் மேற்கொள்ளலாம்.

மாணவர்கட்கு ஞாபகசக்தியால் பரீட்சையில் சாதகமான பலன்கள் கிடைக்கும். 10-ல் வியாழன் உயர்கல்வியில் மாற்றங்களை உண்டுபண்ணும். கலை சம்பந்தமான நடவடிக்கைகள், தொழில் ரீதியான பரீட்சைகளில் துணிந்து இறங்கலாம். வெற்றியுண்டு.

பெண்களுக்கு காதல் லீலைகளில் அதிக நாட்டமுண்டாகும். விவாகப் பேச்சுக்களில் திருப்தியுண்டு. தொழில் தேடுவோருக்கு சாதகமான காலம். பட்டப்படிப்பில் ஈடுபட்டோர் நன்மையடைவர்.

அதிஷ்ட நாட்கள்: மார்ச் 24, 25, ஏப் 3 பி.ப, 4, 5

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 28, 29, ஏப் 6, 7, 8.




பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

ஜன்மராசியை மீனமாகவுடையவர்கட்கு சூரியன் லோகமூர்த்தியாக ஜன்மராசியில் வலம் வருவதால் கஷ்டபலன்கள் தலைதூக்கும். ஜன்மராசிச் செவ்வாய் அவசர புத்தியால் கருமங்களைக் குழப்ப ஏதுவாகும். உடல் உபாதைகள் ஆரம்பிக்கும். பணமுடை கஷ்டத்திற்குள்ளாக்கும். அட்டமத்துச் சனியால் அனுபவிக்கும் அலைச்சலும் துன்பமும் எடுத்தியம்ப முடியாதவாறிருக்கும். இனசன கொண்டாட்டங்களால் வீண் விரோதங்கள் தோன்றும்,

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானத்தில் சுக்கிரன் தாம்பத்திய சந்தோஷத்தைக் கொடுப்பினும் பொருளாதாரக் கஷ்டங்கள் ஏற்படத்தான் செய்யும். புத்திர சுகம், முன்னேற்றம் என்பன குறைவாகவேயிருக்கும். நற்கருமங்கள் கொண்டாட்டங்களில் சலிப்பு ஏற்படும்.

வியாபாரிகட்கு புதன் நற்சஞ்சாரம் செய்யினும் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடையாது. வங்கி உதவிகளால் நன்மையடைவதற்கில்லை. பிறநாட்டு வர்த்தகத்தில் தடங்கல்கள் தோன்றி மறையும்.

உத்தியோகத்தர்களுக்கு அரசியல் ரீதியான செல்வாக்கு பாதிப்புறும். செய்கருமங்களில் அவமானம் ஏற்படும். அவசர தேவைகளுக்காகக் கடன்பட நேரும். தொழில் சம்பத்தமாகத் தண்டனைகள் அனுபவிக்க சனி காரணமாகிறுர்.

விவசாயிகட்கு எவ்வித நன்மையுமில்லை. மிருகங்களாலும், பட்சிகளாலும் பயிரழிவு ஏற்படும். வழக்கு விவகாரங்கள் தீர்ந்தபாடில்லை. பண்ணை விவசாயிகள் நஷ்டத்திற்கு மேல் நஷ்டம் அடைவர்.

தொழிலாளர்கட்கு தொழில் வாய்ப்புகள் சேர்ந்தவர்களாலேயே கெட்டுப்போகும். சகதொழிலாளர் ஒழுங்காக வேலையிலீடுபட மறுப்பர். செய்தொழிலில் அவமரியாதை ஏற்படும். புது ஒப்பந்தங்களைத் தவிர்க்கவும்.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கம் குன்றிக்கலை, விளையாட்டுக்களில் ஈடுபாடு அதிகமாவதால் கல்வி பாழாகும்; நேர்முகப் பரீட்சைகள் சாதகமாக அமையாது. தூரதேசக் கல்வி கற்போர் அவதானமாகவிருக்கவும்.

பெண்களுக்கு அவசர நடவடிக்கைகளால் பணம் விரயமாகும். விவாகமுயற்சிகளை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. கணவனின் ஒழுங்கீனம் கவலை தரும். தொழில் பார்ப்போர் சிக்கல்களுக்குள்ளாவர். 9-ல் வியாழன் தெய்வீக கிருபையால் நிலைமையைச் சமாளிக்க உதவும்.

அதிஷ்ட நாட்கள். மார்ச் 26, 27, ஏப் 6, 7, 8.

துரதிஷ்ட நாட்கள்: மார்ச் 30, 31, ஏப் 1 மு. ப, 9, 10.


வர்த்தக ஸ்தாபனங்களின்

விற்பனையைப் பெருக்கிடும் விளம்பர சேவை

**மணிக்குரல் விளம்பர சேவை**

பஸ் நிலையம் — யாழ்ப்பாணம்

அறிவிப்பாளர்: மேஜர் ஷண்

MANIKKURAL

# ஜன்ம இலக்கினம்

அ. சிவசுப்பிரமணியம், B.A.(Lond)
மல்லாகம்

## கும்பம் (தொடர்ச்சி)

புராதன கால எகிப்திய சோதிடர்கள் கும்ப ராசி நீர் தத்துவமுடைய ராசியென்றும், அது மனிதனின் ஊனக் கண்களுக்கு இரு திரைகளைப் போல் விண்ணுலகில் காட்சியளித்தன வென்றும் கூறினர். ஆகவே அவர்கள், வளைந்த கடல் அலைகள் போன்ற கோடுகளையுடைய எழுத்துச் சித்திரத்தால் [≈] இந்த ராசியை வெளிப்படுத்தினர். மேல்நாட்டுச் சோதிடர்கள் இந்தச் சித்திரத்தை இன்றும் உபயோகித்து வருவது கண்கூடு. சோதிட சரித்திரத்தின் எக்காலத்தில் இந்த ராசி நீர் தத்துவத்திலிருந்து வாயுதத்துவ ராசியாக மாற்றமடைந்ததென்பது கூற முடியாதெனினும், இம்மாற்றம் ஒப்புமை முகத்தால் சிறந்ததெனச் சொல்லக்கூடியதாக அமையவில்லை என்பதே சான்றோரின் திடமான அபிப்பிராயம். புராதன காலத்தில், அதாவது சிங்கராசியில் மக நட்சத்திரத்திற்கு சமீபத்தில் சமராத்திரி தினமேற்பட்ட காலத்தில் [Vernal Equinox] கும்பராசி, வருஷத்தின் மூன்றாவது பருவமான இலையுதிர் காலத்தை [Autumn] குறித்தது என்பர். பிற்காலத்தில் சமராத்திரி தினம் இடபராசிக்கு மாற்றி அமைக்கப்பட, கும்பராசி குளிர் காலத்தை குறிக்கலாயிற்று. சரித்திரப் பிரசித்தி பெற்ற இக்கால கட்டத்தில் அசீரியரும் ஈரானியரும் இடப, சிங்க, விருட்சிக, கும்ப ராசிகள் அரசனைத் தோற்றுவிக்கக்கூடிய ராஜரீகமான ராசிகளென்று கருதியதோடு, அவற்றைக் கழுகின் சிறகுகளுடன் கூடிய காளை போன்றதொரு மிருகத்தின் [Winged Bull] புகழ்பெற்ற சிற்பச் சித்திரத்தால் தெரிவித்தது. கும்பராசியின் மாயமான இயல்பைக் காட்டுவதோடு அது துரதிஷ்ட நிலையிலுள்ள ராசியென்பதையும் இரத்துச் செய்கிறது. கும்ப ராசி வாயு சம்பந்தப்பட்ட சர ராசியாதலால் உள்ளுணர்வும், எதையும் ஆராய்ச்சி செய்து நூதனமாகக் கண்டறியக்கூடிய கற்பனாசக்தியும், சலித்தலாகிய குணமும், பரந்து கிடப்பனவற்றைத் திரட்டி ஒருமுனைப்படுத்தும் சக்தியும் விசேஷமாகக் கொண்டுள்ளது. மானிட ராசியான ஆண்ராசி இருகால் ராசியாதலால் உதயத்தில் வலியது. ஆகவே கும்பம் லக்கினமாக அமையும்பொழுது லக்கினம் அதிக பலம் பொருந்தியதாக அமைகிறது. இது சிரோதய ராசி. சிரோதயமென்றால் தலையால் உதிப்பது. பகற் கண்ணுடையது. எனவே, பகலில் வலியது. செவ்வை நோக்குடையது. இது மனித வர்க்கத்தின் கெண்டைக்கால் பகுதியில் தன் செல்வாக்கைச் செலுத்தும். ஏனைய ராசிகளிலும் பார்க்க மிகக் குறைவான நாலு கதிர்களை மட்டும் உடைய கும்பராசி குறுகியதாயும் சற்றுச் சிவப்பு அல்லது கறுப்பு / பழுப்பு நிறமுடையதாயும், மேற்கு நோக்குடையதாயும் காணப்படும். இது துன்பமூட்டும் கொடூரமான தன்மையும், தாமோ குணமும் உடையது. லோகத்தில் இரும்பையும், நவரத்தினத்தில் நீலத்தையும் குறிக்கும். மனித வர்க்கத்தில் சூத்திர குலத்தினரைக் குறிக்கும். இது வேதாந்த மனோபாவம் உடைய புனித ராசி. இந்த ராசியில் ஒரு கிரகங்களும் உச்சமோ, நீசமோ அடைவதில்லை. வியாழனைத் தவிர ஏனைய கிரகங்கள் கும்ப ராசியில் பிரகாசம் அடைவது இல்லை.

இராசி மண்டலம் 360 பாகைகளைக் கொண்டது. இந்த இராசி மண்டலம் 12 இராசிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இராசியும் 30 பாகைகளை உடையது. ஒவ்வொரு இராசியும் மேலும் பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப் பிரிவுகளே ''வர்க்கங்கள்'' எனப்படும். இலக்கினமோ அன்றேல் கிரகங்களோ இவ் வர்க்கங்களில் இஷ்ட ஸ்தானங்களைப் பொருந்தி அனுகூலமான மூலத்திரிகோண ஆட்சி, அதிமித்துரு, மித்துரு, வீடுகளை அடைந்தால் நல்ல ஸ்தான பெலம் பெற்றுச் சிறந்த பலன்களையும், அவை கெட்ட ஸ்தானங்களைப் பொருந்திப் பிரதிகூலமான அதிசத்துரு, சத்துரு சேத்திரங்களை அடைந்தால் தாழ்ந்த ஸ்தான பலத்தைப் பெற்றுப் பெரும்பாலும் தவறான பலன்களையும் கொடுப்பார் என அனுமானிக்கப் பட்டுள்ளது; சில வர்க்கங்களின் அமைப்பு ராசிநிலையை விட மேம்

பாடு உடையதாகவும், ராசி நிலையில் காணப்படாத இராஜயோகங்களை உள்ளடக்கியதாகவும் சில சமயங்களில் காணப்படுவதால், நாம் அவற்றினை நன்கு ஆராய்ந்து அந்த யோகதசைகள் சம்பவிக்கும் காலங்களில் இராஜயோக பலன்கள் கூறுவதும உண்டு. 16 வர்க்கங்கள் இருப்பினும் பொதுவாக ஸ்தான பலத்தைக் கணித்துப் பலாபலன்களை நிர்ணயிக்கச் சிலர் தச வர்க்கங்களையும், சிலர் சப்த வர்க்கங்களையும், சிலர் சட்ட வர்க்கங்களையும் உபயோகித்து வருகின்றனர். இங்கு நாம் கும்ப இலக்கினத்தின் சட்ட வர்க்கங்களையும், அவற்றில் மிக முக்கியம் வாய்ந்த சில வற்ருல் ஏற்படும் பலாபலன்களையும் சுருக்கமாக ஆராய்வோம். ராசி, ஓரை, திரிகோணம், நவாம்சம், துவாதசாம்சம், திரிம்சாம்சம் ஆகிய ஆறு வர்க்கங்களுமே 'சட் வர்க்கங்கள்' எனப்படும். கும்ப இராசி ஆண் இராசியாகிய ஒற்றை இராசியாகையால், முதல்பதினைந்து பாகைகளும் சூரிய ஓரை எனவும், கடைசி பதினைந்து பாகைகளும் சந்திர ஓரை எனவும் கூறப்படும். இலக்கினம், சூரியன், செவ்வாய், வியாழன், சனி, கேது ஆகியோர் சூரிய ஓரையிலும், ஏனைய 4 கிரகங்களான சந்திரன் புதன், சுக்கிரன், ராகு ஆகியோர் சந்திர ஓரையிலும் வலுப்பெறுவர். சூரிய ஓரை ஆண்மை, அதிகார தோரணை, தற்சார்பு, சுதந்திரப் போக்கு ஆகிய இயல்புகளையும், சந்திர ஓரை பெண்மை, சாந்தம், இரக்கசுபாவம் முதலிய இயல்புகளையும் நல்கும். ஓராச் சக்கரம் அமைக்கும் முறைபற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டென்றும், சில பிரபல சோதிடர்கள் மேற்கூறியவண்ணம் ஓராதிபத்தியத்தை வெளிச்சமூட்டும் இராஜ கிரகங்களான சூரிய சந்திரர்களுக்கு மட்டும் கொடுக்கும் முறையை விடுத்து; மிகப் பழங்கால சோதிடமுறைக்கமைய ராசி ரீதியாக அமைத்து வருகிருர்களென்றும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கும்பரர்சியின் முதலாவது திரேக்காணம் [10 பாகைகள்] ஆண் திரேக்காணமாகும். அது இலக்கினதிபதியான சனீஸ்வரனின் ஆதிக்கத்துக்குள் அமையும். இரண்டாவது பத்து பாகைகளும் பெண் திரேக்காணம். அதன் அதிபதி ஐந்தாம் வீட்டு அதிபதியான புதனுவர். மூன்ருவது பத்து பாகைகளும் ஆண் திரேக்காணம். அதை ஒன்பதாம் வீட்டு அதிபதியான சுக்கிரன் ஆட்சி புரிவார். முதலாம் திரேக் காணத்தில் இலக்கினம் அமையுமாயின், ஜாதகர் மனித சமுதாயத்தின் மீது பச்சாத்தாபமுள்ளவராய், அவர்களின் முன்னேற்றத்திற்காக அரும் பாடுபடுபவராயும், சமூகசம்பந்தமான கொண்டாட்டக் கூட்டங்களில் பிரபலமாகப் பங்கு கொள்பவராயும், உருப்படியான காரியங்களையே பெரும்பாலும் நிர்மாணிக்கக் கூடியவராயும், விஞ்ஞான அழகியற் கலைகளில் மேம்பாடுடையவராயும், அவற்றின் நுட்பங்களை அப்பியாசிப்பவராயும் காணப்படுவர். இரண்டாவது திரேக்காணத்தில் ஜனனமானவர் உணர்ச்சி வசப்படாத நிதானமான போக்கு உடையவராயும் விஞ்ஞான ஆராய்ச்சி, கண்டுபிடிப்புகள், தொழில் நுட்பங்கள் ஆகியவற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு இன்பம் அனுபவிப்பவராயும், தத்துவ சாஸ்திரம், வேதாந்தம், ஆகியவற்றில் பிரசித்தி பெற்றவராயும் மிளிர்வர். மூன்ருவது திரேக்காணத்தில் தோன்றியவர் மிக ஆழ்ந்த சித்தனு சக்தியும், பொறுமையும், விடாமுயற்சியும் சுயேச்சையான போக்கும், எளிதில் எதையும் ஊடுருவிக் கிரகித்து உறிஞ்சிக்கொள்ளும் விவேகமும், கணித விஞ்ஞான, வானசாஸ்திர, சோதிட அழகியற் கலைகளில் மேன்மையான பாண்டித்தியமும் உடையராகக் காணப்படுவர். ஒரு இராசியை பன்னிரண்டு கூறுகளாக வகுக்க வருவதே 'துவாதசாம்சம்'. ஒரு துவாதசாம்சம் $2\frac{1}{2}$ பாகை அளவுள்ளதாகும். கும்பராசியின் 12 துவாதசாம்சங்களும் கும்பராசி முதலாக மகர ராசி ஈருக அமையும். ஆகவே சனி, வியாழன், செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன், சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி ஆகியோர் முறையே 12 துவாதசாம்சங்களையும் ஆட்சி புரிவர். ஒரு இராசியை முப்பது கூறுகளாக வகுக்க வருவதே 'திரிசாம்சம்'. கும்பராசி ஒற்றை இராசியாகையால் $1^\circ - 5^\circ$ பாகைகள் செவ்வாயாலும், $6^\circ - 10^\circ$ பாகைகள் சனியாலும் $11^\circ - 18^\circ$ பாகைகள் வியாழனுலும், $19^\circ - 25^\circ$ பாகைகள் புதனுலும், $26^\circ - 30^\circ$ பாகைகள் சுக்கிரனுலும் ஆளப்படும். இராசி வர்க்கங்களுள் நவாம்சம், திரிசாம்சம், திரேக்காணம், துவாதசாம்சம் மிக முக்கியமானவையென்றும், விசேஷமாக விவாகம், தாம்பத்திய வாழ்வு ஆகியவற்றை ஆராயும்பொழுது நவாம்சத்தோடு திரிம்சாம்சத்தையும் மிகமுக்கியமாகக் கவனிக்க வேண்டுமென்பதையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். இங்கு ஆராயப்படும் வர்க்கங்களுள் அடங்காத வேறு ஒரு மிகச்சிறந்த முறையாலும், திம்ரிசாம்ச பலன் காணுவதுபோல், 12 இராசிகளிலுமுள்ள ஒவ்வொரு பாகைக்கும் உரிய சங்கேதக்

குறிகளின்" மூலம் [Symbolism] அப் பாகையின் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த இரகசியக் கருத்தினை அறிய முடியுமென்பதையும் வாசக நேயர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கும்ப இராசி செவ்வாயின் நட்சத்திரமாகிய அவிட்டம் 3-ம், 4-ம் பாதங்களையும் [0°-00 — 6°-40′], இராகுவின் நட்சத்திரமாகிய சதயம் 1ம் 2ம், 3ம், 4ம் பாதங்களையும் [6°-40′—20°-00′] தேவகுருவாகிய வியாழனின் நட்சத்திரமான பூரட்டாதி 1ம், 2ம், 3-ம் பாதங்களையும் கொண்டதாகும். கும்ப இராசியின் 9 நவாம்சங்களும் [ஒவ்வொரு நவாம்சமும் 3° - 20′ கொண்ட கூறு] சுக்கிரனின் துலா இராசி முதலாகப் புதனின் மிதுன இராசி ஈறாக அமையும், ஆகவே 9 நவாம்சங்களும் சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி, சனி, வியாழன், செவ்வாய், சுக்கிரன், புதன் ஆகியோர்களால் முறையே ஆட்சி செலுத்தப்படுகின்றன. நவாம்ச லக்கினத்தின் பலன்களை ஆராயமுன், ஒரு விஷயத்தை நினைவூட்ட விரும்புகிறேன். இலக்கினத்தில் இருக்கும் கிரகங்களின் தன்மையாலோ அன்றேல் அதைத் திருஷ்டிக்கும் கிரகங்களின் தன்மையாலோ சிறு மாற்றங்கள் ஏற்படக் கூடுமாயினும், பெரும்பகுதியான பலன்கள் நட்சத்திர அதிபதி, இராசி அதிபதி, நவாம்ச அதிபதி ஆகியோரின் தன்மைகளுக்கேற்றவாறே சோபிக்குமாகையால், அவற்றின் அடிப்படை இயல்புகளை அனுசரித்தே இங்கு நவாம்ச லக்கினத்தின் பலன்கள் கூறப்படுகின்றன. இவை நஷ்ட ஜாதகங்களைக் கணிப்பதற்கும் மிக உதவியாக இருக்கும் என்பதை நன்கு அறிக. ஜன்ம இலக்கினம் அவிட்டம் 3-ம் பாதத்தில் அமையின் சுக்கிரனின் துலா நவாம்சம் ஏற்படும். இந்த ஜாதகர் வலுவான கன்னங்களும், நீண்ட தடித்த கழுத்தும், உயர்ந்த பிற வடிகளும், நாசிகளும், மிருதுவான இளைத்த தேகமும், அழகான தோற்றமும் பெற்றிருப்பார். சிற்றின்பநேசன்; தீவிர உணர்ச்சி உடையவர்; எல்லாம் தமது நன்மைக்கேயென நம்பி எதிர்காலத்தில் மிக நம்பிக்கை கொண்டவராக நெறியான தொழில்களில் பெரிதும் ஈடுபாடு கொள்ளும் சூரர்; சாஸ்திரங்கள், கவிதைகள், அழகியற் கலைகள் ஆகியவற்றில் பெருவிருப்பமுடையவர். அவிட்டம் 4-ம் பாதத்தில் ஜெனனம் ஏற்படின் செவ்வாயின் வீடான விருச்சிகம் நவாம்ச இலக்கினமாக அமையும். ஜாதகர் பெரிய தலையும், அகலமான தோள்களும், தடிப்பான கை கால்களும், அசாதாரணமான தோளும் கேசமும், தூல தேகமும், நடுத்தர உயரமும் உள்ளவர். துணிகரமான செயல்களும், விவேகம், வைராக்கியம் ஆகியனவும் கைவரப் பெற்றவராய் எடுத்த காரியத்தைச் சிறப்புற நிறைவேற்றும் திறமையும், சத்துருக்களை அழிப்பதில் சாமர்த்தியமும், அரசாலும் பொதுமக்களாலும் பூஜிக்கப்படத்தக்க அந்தஸ்தும், சாஸ்திரங்கள், கதைகள் இவற்றில் அதிக பிரியமும் கொண்டிருப்பர். சிலர் காமம், கர்வம், கோபம், சந்தேகம், பேராசை ஆகிய இயல்புகள் உடையவராகவும் காணப்படும்.

சதயம் 1-ம் பாதத்தில் பிறந்தவர்கள் வியாழ பகவானின் தனுசு இராசியை நவாம்ச இலக்கினமாகப் பெறுவர். இவர்கள் நீண்ட கேசமும், பளபளப்பான உடல் அமைப்பும், வலிமையான தொடைகளும் கைகளும், அழகான தோற்றமும், புத்தி நுட்பமும், நற்குணமும், சுகமும், ஐஸ்வரியமும், இன்பமும் அனைவரிடத்தும் நட்பும், சாஸ்திர அறிவும், நீதி நிர்வாக ஆற்றலும், அரசாங்க உத்தியோகமும், பிரயாண மோகமும் உடையவராவார், சதயம் 2-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு சனீஸ்வரனின் மகர நவாம்சம் சம்பவிக்கும். இவர்கள் நீண்ட உருண்டையான அழகிய முகமும், கனிந்த பார்வையும் நல்லாகத் திறந்து பேசாத அழகிய வாயும், ஒல்லியான சமமான தேகமும். திடசித்தமும், வாக்கு சாதுரியமும், கடின உழைப்பும், உபாயமும், கோபமும், துர் ஆசையும், சுயநலப்பற்றும், மனைவியிடம் பிரீதியும், வாசனைத் திரவியங்களில் மோகமும், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றில் ஆர்வமும், வாதபீடையும் உடையவராவார். சதயம் 3-ம் பாதத்தில் ஜன்ம லக்கினம் ஏற்பட்டால், நவாம்ச இலக்கினம் சனீஸ்வர பகவானின் கும்ப இராசியாக அமையும்; இலக்கினம் வர்க்கோத்தம பெலம் பெறும், இவர்கள் அகன்ற முகமும் நீண்ட கழுத்தும், விசாலமான பாதங்களும், பருமனான துடைகள் கால்களும், தசை நார்கள் வெளிப்புறமாகக் காணக்கூடிய தன்மையும், கடினமானதும் அடர்த்தியானதுமான கேசமுடையவராயும், வயிற்றுக் கோளாறுகளாலும், பித்தநீர் சம்பந்தமான ரோகங்களாலும் பீடிக்கப்பட்டவராயும், வயது மூப்படைந்தவர்போல் தோன்றுபவராகவும் இருப்பர். நண்பர்களையும், சத்துருக்களையும் நேசிக்கும் ஜனவசிய சொரூபி; புத்திசாலியாகவும், விஞ்ஞான ஆராய்ச்சி, நூதன சாதனைகள், கண்டுபிடிப்புகள், தத்துவஞானம்

ஆகியவற்றில் அதிக ஈடுபாடுடையவராகவும், தியாகியாகவும், ஏகாந்தத்தையே பெரிதும் விரும்புபவராயும், பிற்காலத்தில் பொருள் இன்மையால் வருந்துபவராயும் காணப்படுவர். சதயம் 4-ம் பாதத்தில் உதித்தவர்களுக்கு தேவகுருவாகிய வியாழபகவானின் மீன நவாம்சம் வாய்க்கப் பெறும். இவர் புலியின் முகத்தை ஒத்தவராகவும், பருத்த சரீரமும், தூக்கமுள்ள கண்களும், சுருண்ட கேசமும் உடையவராவர். இவர் நல்ல புத்திமானும், குணசீலனும், நன்னடக்கையுடையவனும், மானியும், நல்லோரின் இணக்கம் உடையவனும், நினைத்த காரியம் முடிப்பவனும், சுகவானும் ஆவான்.

பூரட்டாதி 1ம் பாதத்தில் பிறந்தவர்கள் செவ்வாயின் மூலத்திரிகோண வீடான மேட இராசியைத் தமது நவாம்ச லக்கினமாகப் பெறுவர். இவர்கள் ஆட்டின் கண்களைப் போன்ற விழிகளும், உருண்டையான முகமும், அகன்ற மார்பும், உயர்ந்த நெற்றியும், பித்தநீர் சம்பந்தமான கோளாறுகளும் உடையவர். நல்ல தேஜஸ்,ராஜ லக்ஷணம் ஆகியனவும் பராக்கிரமமும், சுடுசுடுப்பான கோபமும், அசட்டுத் துணிவும், விபத்துக்களில் சிக்கும் தன்மையும், அதிக செல்வம் தேடியழித்தலும், மனைவிக்கு அடங்கி நடக்கும் போக்கும் இவர்களிடம் பெரும்பாலும் காணப்படும். பூரட்டாதி 2-ம் பாதத்தில் ஜனனம் ஏற்படின் சுந்தராங்கனை சுக்கிரனின் இடப இராசி நவாம்ச லக்கினமாக அமையும். இவர்கள் பரந்த முகமும், பூவிதழ் போன்ற வசீகர விழிகளும், பலம் பொருந்திய கழுத்தும், மிருதுவான சிறந்த பற்களும், பளபளப்புடையதும் உருண்டையானதுமான அங்கலட்சணங்களும், மனோகரமான தோற்றமும், நற்பண்புகளும், நாகரீகமும், சுகபோக வாழ்வும், சாந்தமான போக்கும், கஷ்டப்பட்டுப் பிரயத்தனஞ் செய்யும் ஆற்றலும், நல்ல அந்தஸ்தும், விஞ்ஞானம், அழகியற் கலைகளில் பற்றும் வாய்க்கப்பெற்றவராவர். பூரட்டாதி 3-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு புதனின் வீடான மிதுனம் நவாம்ச இலக்கினமாக ஏற்படும். இவர்கள் உருண்டையான அழகிய முகமும், அகன்றநெற்றியும், தோற்றமான மூக்கும் பெரும்பாலும் கருமையான நிறமும், ரம்மியமான தோற்றமும், நல்ல பெலமும், அதிக சுறுசுறுப்பும், பலகலைகளில் வல்லமையும், சாதுரியமாகச் சம்பாஷிக்கக்கூடிய ஆற்றலும், நன்மதிப்பும், நல்ல மனைவி மக்கள் வாய்க்கப்பெற்று அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படும் தன்மையும், ரோகங்களாலும், விபத்துக்களாலும் பீடிக்கப்படும் இயல்பும் உடையவர்.

(தொடரும்)

---

ஆய்வு மன்ற... (25-ம் பக்கத் தொடர்ச்சி)

**மயில்வாகனம் இரத்தினம்,**
**208, கொழும்பு வீதி - கண்டி**

உங்கள் சாதகம் — கிரகநிலை - இலக்கினம் கடகம் - அதில் இராகு - 4-ல் சந்திரன், சனி, 6-ல் குரு, 7-ல் கேது, 10-ல் சூரியன் -புதன், சுக்கிரன், 12-ல் செவ்வாய் என அமைய வேண்டும். உங்கள் ஜென்ம நட்சத்திரமும் சித்திரை 4-ம் பாதமாக வரும். தற்காலம் ஏழரைச்சனியின் கோசர சஞ்சாரத்துடன் சேர்ந்துள்ளதால் உங்கள் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் தடைதாமதங்கள்—ஏமாற்றங்களாய் அமையலாம் தானே.

சு. சிவராசா, 77 பெரியதம்பனை - மடுக்கோவில்

1957-03-04 க்குச் சரியான தமிழ்த்திகதி துர்முகி வருடம் மாசி மாதம் 21-ந் திகதி திங்கட்கிழமை என்பது. உமது இலக்கினம் துலாம். நட்சத்திரம் ரேவதி 3-ம் பாதம்

து. சுகுமார், 34, புதுமுகத்துவார வீதி, கல்லடி.

காலசர்ப்ப யோகம் - சகட யோகம் முதலிய யோகமுள்ள சாதகம். இறை நம்பிக்கை நல்வழி காட்டும். கணித சோதிடரை அணுகினல் மனச் சாந்திக்கு வழி காட்டுவார்.

க. பத்மினி, ஜெயந்திநகர் 168 - கிளிநொச்சி

நீங்கள் குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்துக்கு எந்தப் பஞ்சாங்கமாயினும் இலக்கினம் இடபமாகவே அமையும். செனன நட்சத்திரம் சுவாதி 1-ம் பாதம். உங்கள் கணிப்பின்படி சித்திரை 4-ம் பாதம் பிழையானது. சாதகத்தைச் சரியாக்க, கணித சோதிடரிடம் காண்பித்தால் உங்கள் பலனையும் சரியாக அறிவீர்கள்.

மா. கணேசரத்தினம், உரும்பிராய் தெற்கு.

புதன்தசை நிகழுகின்றது, அத்துடன் குரு, சனி இவர்களின் கோசரசஞ்சாரமும் சாதகமாக அமையவில்லை. பூர்வகருமபலனை அனுபவிக்க வேண்டியகாலம். திருமாலையும், ஐயனரையும் பக்தியுடன் வழிபடுவதால் விரைவில் கஷ்ட சாந்தி ஏற்படலாம்.

## இடப இலக்கின ஆணும் மேட இலக்கினப் பெண்ணும் சேர்வதால் ஏற்படும் பலன்

வே. சின்னத்துரை, நல்லூர், யாழ்ப்பாணம்.

இடப லக்கின ஆண் மிகவும் பலம் வாய்ந்தவர். தனது முறைகளில் ஏற்கனவே அமைக்கப் பட்ட விதிகளைக் கையாள்பவர். ஆனல் மேட லக்கினப் பெண்ணே புதிய எண்ணங்களிலும், புதிய நடவடிக்கைகளிலும் சுபாவமாகவே ஈடு பாடுள்ளவர். அவர் கவனமாகவும், தர்க்க ரீதியாகவும் எண்ணங் கொள்பவர், அவவுடைய எண்ணங்கள் குளறுபடியாகவும், ஸ்திரமற்றதாகவும் இருக்கும். அவருடைய வைதிக மனப்பாங்கினுல் அவ ஒழுங்கீன விரக்தி மனப்பான்மையுடையவராவார். அவர் மேல் சுமத்தப்படும் புதிய புதிய எண்ணங்களால் அவர் தடுமாற்றம் அடைவார். இருவரும் தான் தான் தலைவன் என்ற தேவை அவர்களைப் பீடிக்கும். இது இருவருடைய மனத்திலும் மோதலை உண்டாக்கும்.

கலைத்துறைகள் இவருக்கு முக்கியமாகத் தோற்றும். கற்பனை, சாகசங்கள் இவரில் உண்டாகும். இது செயலளவில் அசாதாரணமாக விருக்கும். சமையல் வேலை கூட அவருக்கு ஒரு கலையாக விளங்கும். அதில் அவ தான் கை தேர்ந்தவராக இருக்க வேண்டும். இவ்வுணர்ச்சிகளை அவவுடன் இவர் பங்குகொள்ள முயல்வார். ஆனல் அவவுடைய கரிசனையெல்லாம் வேறெங்கோ இருக்கும். கலையோடு சம்பந்தப்பட்டதெல்லாம் அவவுக்கு சிரத்தையற்றதாகவிருக்கும்.

உடலாலும் உணர்வாலும் அவர் எல்லாவற்றையும் உரிமையுடன் அல்லது அதிகார பூர்வமாகக் கேட்பார். அவவால் கொடுக்க முடியாத அளவிற்கு அவர் கேட்பார். இது இரு பகுதியிலும் இருந்து எதிர்ப்பைக் கிளறும். எவ்வளவற்றைத்தான் கொடுத்தாலும் அவர் தன்னலமும், பொறுமையுமுள்ளவராவார்.

பாலுறவில் இருவருக்கும் ஆர்வமுடைய பசி இருக்கும். அவர் எல்லாவற்றிற்கும் மேலாகப் பாலுறவிற்கே முதன்மை கொடுப்பார். ஆனல் அவ அதிலும் பார்க்க வேறு விடயங்களுக்கு முதலிடம் கொடுப்பா. அவர் தன்னுடைய முதன்மையை பிழையான வகையில் வைக்கிறுர் என்று அவ அவரில் குற்றங்கள் பிடிப்பா. அவருடைய உணர்ச்சிகளுக்கு சரியாக ஈடு கொடுக்க முடியாவிட்டால் அவர் சரியாகச் செயல்பட மாட்டார். வெளியுலகில் முழுமையுடன் சிக்குப்பட்டு அதனுல் செயலுக்கு ஊக்கப்படுத்தப்பட்டாலன்றி பாலுறவைப் பற்றி அவ நினைக்கவே மாட்டா.

இது ஒரு சீரிய பொருத்தமல்ல.

## திருமண முகூர்த்தம்

-மாத்தளை அருணேசர்

திருமணத்துக்கு நாள் நட்சத்திரம் முதலியவற்றைப் பார்ப்பவர்கள் கீழே காணப்படும் செய்யுளைக் கவனிப்பது நலம்.

செய்யுள்

"சூடிய மணநாள் மூலம், ரேவதி, மகமே ஜோதி
ஓடுமான் தலையு ரோகிணி, அனுஷம், உத்திரங்கள், அத்தம்
கூடில் நன்று உவாவிருத்தை அட்டமி கொடியோர் வாரம்
ஆடி மார்கழி புரட்டை மாசிதான் அதமம் அன்ன
அன்னமே மிதுனங் கும்பம் அலவ னேடிடபம் வில்லு
கன்னி கோல் நன்று பன்னென்று ஆறுமூன்று இனிய தீக்கோள்
பொன்னவன் எட்டில் தீயன் புகர் புதன் ஆறெட்டா கார்
இன்னவர் ஏழில் பொல்லார் இந்து நன்று இரண்டு மூன்றே"

# திருமணம் தடைப்படுவதேன்?

(வி. எஸ். வேலாயுதன் துறைநீலாவணை கி. மா.)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மட்டக்களப்பிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனை ஒன்றில் தாதியாகப் (Nurse) பணிபுரியும் மாதிளம் பெண்ணின் ஜாதகத்தை இங்கு ஆராய்வாம். 30 வயதைத் தாண்டியும் விவாகம் நடைபெறுது தடைப்பட்டவண்ணமிருக்கும் இவரின் ஜெனன கணிதம் பின்வருமாறு அமையும். பிறப்பு நிகழ்வு 28-3-1953 முன்னிரவு 10 மணி 50 நிமிடம். பூர நட்சத்திரம் 4-ம் பாதம். சுக்கிர மகாதெசையில் இருப்பு வருடம் 3 மாதம் 4 நாள் 4 ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| சூரி | குரு செ சுக் | | |
| புத | இராசி | | கேது |
| ராகு | பூரம்-4 | | சந் |
| | ல | | சனி |

| | | | |
|---|---|---|---|
| புத | | ராகு | |
| | அம்சம் | | |
| ல | | | சுக் செவ் |
| குரு | கு சந் கே | | சனி |

இந்த ஜாதகி என்னை நேரில் சந்தித்து தனது ஜாதகம் அதிர்ஷ்டகரமானதாக அமைந்திருந்தும் திருமணம் தடைப்பட்ட வண்ணமாக இருப்பதாகவும், இதற்குக் காரணம் எதுவாக இருக்கலாம் எனவும் வினவினர். நான் இந்த ஜாதகநகலை மிக நுட்பமாகப் பரிசிலனை செய்யலானேன். இலக்கினம் விருச்சிகம். இலக்கினதிபன் செவ்வாய் பரணி நட்சத்திரத்தில் அமர்ந்து தனது சுயவீட்டில் ஆட்சிபெற்று நிற்கிருர். ஆட்சி அதிகாரம் ஒருபுறமிருக்க அவர் 6-ம் இடத்தில் அல்லவா மறைவு பெற்றுள்ளார். செவ்வாய்க்கு 6-ம் இடம் வாய்ப்பான ஓர் இடமாயினும் அவர் இலக்கினதிபனுகி 6ல் மறைந்திருந்து இலக்கினத்தை நோக்குவது நன்றல்ல. இலக்கினத்தை இலக்கினதிபன் நோக்குவது நன்று; ஆனுல் இலக்கினதிபன் தீய கிரகங்களில் ஒருவனுகி இலக்கினத்தை நோக்குவது தீதாகும். எனவே செவ்வாய் இலக்கினத்தை நோக்கித் தாக்கமுறச்செய்வதால் இலக்கினம் பலவீனமடைகிறது என்பது தான் பொருளாகும். இலக்கினதிபன், இலக்கினம் ஆகிய இரண்டும் பலமிழக்க ஒரு ஜாதகர் இயல்பாகவே புகழ், செல்வம், கீர்த்தி, சுகம், மங்கலமான மணவாழ்வு ஆகிய அனைத்தையும் இழந்து விடுகிருர். திருமணமானுலும் குடும்ப வாழ்வில் புயல் வீசியவண்ணமிருக்கும். எனது ஐயப்பாட்டைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் இந்த ஜாதகியிடம் உங்களுக்கு அடிக்கடி மனுேநிலை பாதிக்கப்பட்டவண்ணமிருக்கவேண்டும். அப்படியான சந்தர்ப்பங்களில் எல்லாம் உணர்ச்சி வசப்பட்டு பொறுமையிழந்து காணப்படுவீர்கள் இல்லையா? என்றேன். எனது கூற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் வகையில் 'ஆம்' என்று துணிவோடு பதிலிறுத்தார்.

செவ்வாய் அமர்வு பெற்றுள்ள பரணி நட்சத்திராதிபன் சுக்கிரனும் அதே நட்சத்திரபாதத்திலேயே இருக்கிருர். சுக்கிரன் களத்திரகாரகன், அதாவது விவாகத்திற்குக் காரணமாக இருப்பவன் மட்டுமல்ல இந்த ஜாதகத்தில் களத்திரத்தானமாகிய 7-ம் இடத்து அதிபதியும் கூட. 6-ம் இடம் 7-ம் இடத்திற்கு 12-ம் இடமாகும். இங்கு இலக்கினதிபன், களத்திரத்தானுதிபன் களத்திரகாரகன் ஆகிய முத்திறத்தன்மையும் வாய்க்கப்பெற்ற இருவரும் மறைந்து விடுகின்றனர். இதனுல் விவாகத்தடை தாமதங்கள் ஒருபுறமிருக்க விவாகம் குழப்பத்தில் சென்றுதான் முடிவுறும். செவ்வாய் தோஷத்தைப் போன்றே சுக்கிரதோஷமும் பதிப்பை திருமணத் தடையை உண்டு பண்ணக்கூடியதாகும். ஆனுல் இந்த ஜாதகத்தில் செவ்வாய் சுக்கிரன் இருவரும் ஒரே நட்சத்திர பாதத்தில் பீடுநடை இடுவதுதான் திருமணவாழ்வுக்குக் குந்தகம் ஏற்படக் காரணமாகின்றது.

இந்நிலையில் இந்த ஜாதகிக்கு விவாகம் அமைதியாக, மங்கலமாக நடைபெறும் என்று கூறுவது எங்ஙனம்?

அடுத்து களத்திரத்தின் இயல்பு குணுகுணம் பற்றி விமர்ச்சிக்கும் அம்சாசக்கரத்தை நோக்குவோம். இராசியில் தொடர்ந்து இங்குதான் துரதிஷ்டம் முற்றுப்பெறுகின்றது. அம்ச இலக்கினத்திற்கு 8-ம் இடத்தில் மாங்கல்யத் தானத்தில் செவ்வாய் சுக்கிரன் ஆகிய இருவரும் ஒட்டி உறவாடுகின்றனர். இராசி, அம்சம் ஆகிய இருநிலைகளிலும் சுக்கிரன் செவ்வாயின் கோரப்பிடியில் சிக்குண்டு தவிப்பதை வாசக நேயர்கள் ஊன்றி நோக்குவார்களாக. இந்த ஜதகியின் திருமணத் தடைக்கும் இழுபறிக்கும் இது ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.

இனி குடும்பத்தானமாகிய 2-ம் இடத்தை எடுத்துக் கொள்வோம். குடும்ப, பாக்கியத்தானத்ததிபன் வியாழன், செவ்வாய்-சுக்கிரன் ஆகிய இருவரோடும் இணைந்து 6ல் மறைந்துவிட்டார். அம்சத்திலும் குடும்பத்தானம் செவ்வாயினுல் தாக்குண்டு நிற்பதைக் காணலாம். சனி குடும்பத்தாளுதிபனுகி 9ல்; ஆனுல் குடும்பத்தானத்திற்கு 8ல் மறைவு பெற்றுள்ளார். எனவே இந்த ஜாதகிக்கு குடும்ப வாழ்வோ குடும்ப பலனே இருப்பதாகத் தெரியவில்லை எனத் துணிந்தேன்.

ஆனுல் நவீன எண்சோதிடத்தில் இந்த ஜாதகியின் திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது அவசியமாகின்றது. ஜாதகத்தில் கிரகங்கள் இராசி அம்சம் ஆகிய இருநிலைகளிலும் பலமிழந்து நிற்குமிடத்துப் பிரீதி, சாந்தி ஆகிய கிரகதோஷ நிவிர்த்தி கருமங்களைச் செய்து அமைதியும் ஆறுதலும் இஷ்ட சித்திகளும் பெறுவது வழக்காருகும். நவீன எண்மலையோ இதனை முற்ருகவே நிராகரித்து வலுவிழந்த கிரகத்தைப் பல வழிகளாலும் வலுப்படுத்தி வாழ்க்கையை வளம் பெறச் செய்யுமாறு வற்புறுத்துகின்றது. நவீன எண்கலை கூறும் அந்த நல்ல வழிதான் பெயர் மாற்றம் என்னும் விதிமுறையாகும். இந்தப் பெயர்மாற்ற வழிமுறையால் செயலிழந்து நிற்கும் ஒரு கிரகம் உயிர்ப்புச் சக்தியையும், உத்வேகத்தையும் பெற்றிருக்கின்றது. ஒரு ஜாதகத்திற்குப் பொருத்தமான ஆதிபத்தியச் சிறப்புமிக்க ஒரு கிரகத்தின் அதிர்ஷ்ட எண்ணில் ஒருவரின் பெயர் அமையும்போது நாள் ஆக ஆக அவரின் வாழ்க்கையில் பல புதிய திருப்பங்களை எல்லாம் கண்டிட முடிகின்றது. இது வெறும் கற்பனையல்ல; நூற்றுக்கணக்கானேருக்குப் பெயர்மாற்றம் செய்து கண்ட அனுபவ உண்மையாகும்.

இந்த ஜாதகியின் பிறப்பு எண் 28=10=1 கூட்டு எண் 4. இவ்விரு எண்களும் ஒத்ததன்மையும், இயல்பு வாய்ந்த ஒரே குடும்ப (Group) எண்களாகும். ஆயினும் இவ்விருவகை எண்களின் இயல்புகளையும் அவை ஜாதகத்தின் இரு நிலைகளிலும் எந்த அளவுக்கு ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதையும் இங்கு ஆராய்தல் அவசிவமாகின்றது.

பிறப்பு எண் 1 ஐக் குறிக்கும் கலப்பு எண் 28 ஆகும். நவ எண்கள் வரிசையில் எண் 12ம் சுபமான அதிஷ்டமான ஓர் எண்ணேயாம். இந்த எண்குறிக்கும் வெவ்வேறு [1,10,19,28] திகதிகளில் பிறந்த பலரும் தாம் எண் ஒன்றின் ஆதிக்கர் என்று தம்மைப் பெருமைபடுத்திக் கொள்ளுகின்றனர். இத்தகையோரின் முடிபு தவருனதாகும். கலப்பு எண்களைப் பகுத்து ஆராயும்போதே இவ்வுண்மை எளிதிற் புலனுகும். 19, 28 ஆகிய எண்களில் பிறந்தோர் ஏனைய இரு திகதிகளில் பிறந்தோரிலும் வேறுபட்ட எதிரிடையான குணவியல்புகளை உடையோராகவே விளங்குவர். இவர்களுள் அனேகருக்குத் திருமணம் தடைப்பட்டவண்ணமிருப்பதையும், சிலருக்குக் காலங்கடந்து திருமணப்பேறு கிடைத்தும் பின்னர் குடும்பவாழ்வில் அமைதி குன்றி மகிழ்ச்சியற்று இருப்பதையும் மற்றும் சிலருக்கு தாரப்பிரிவு, தார இழப்பு ஆகியன ஏற்பட்டிருப்பதையும் நான் எனது அனுபவத்தில் பலரது வாழ்வில் கண்டிருக்கிறேன். தயவுசெய்து இந்த எண்காரர் என்னை மன்னிப்பார்களாக.

இந்த ஜாதகி 28-ம் திகதி பிறந்தவர் என்பதை முன்னர் கண்டோம். எண் ஆதிக்கத்துள் வரும் திகதிகளுள் மிகமிகப் பிரச்சினைக்குரியது 28-ம் திகதியாகும். எண் 2 சந்திரனையும், 8 சனியையும் குறிப்பதாகும். இவ்விருவகை எண்களும் கிரகங்களும் ஒன்றுக்கொன்று, ஒருவருக்கொருவர் பொருத்தமற்ற சகபாடிகளாவர். சந்திர சனி சம்பந்தம் விரும்பத்தகாத ஒரு பிணைப்பாகவே கருதப்படுகிறது. 'ஹிஸ்டீரியா'ப் பெண்களையும் மனநோயுள்ள ஆண்களையும் சந்திர-சனி சம்பந்தம் இலகுவில் அடையாளம் காட்டிவிடும். மாறுபட்ட

ஸ்திரமற்ற மனேபாவத்தையும், குணநலன்களையுமுடைய இவ்வெண் ஆதிக்கர் இலகுவிலுணர்ச்சி வசப்படும் தன்மையருமாவர். இந்த ஜாதகத்தின் இராசியில் இலக்கினம் சனியினுல் தாக்கப்படுவதையும் அம்சத்தில் சந்திரன் சனியால் தாக்கப்படுவதையும் நாம் ஊன்றி நோக்குதல் வேண்டும். மேற்சொன்ன குறைபாடுகளுக்கு இந்த இரு முனைத்தாக்கங்களுமே முக்கிய காரணமாகும்.

பிறப்புஎண் 1ஐக் குறிக்கும் சூரியன் இராசி 10க்குடையராகி 5ல் நிற்கிறுர். சூரிய இலக்கினத்திற்கு 2ல் செவ்வாய் - சுக்கிரன் - குரு ஆகியோர். 7ல் சனி. இந்தச்சனியினுல் சூரிய இலக்கினம் பிறப்பு எண் தாக்கப்படுவதையும் கவனத்திற் கொள்ளவேண்டும், பிறப்பு எண் பலவீனமுற்றுலும் கூட்டு எண் 4 பலமடைந்து நிற்பதை ஜாதக வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது. எண் 4ஐக் குறிக்கும் கிரகம் இராகுவாகும். இது இலக்கினத்திற்கு 3-ம் இடமாகிய மகரத்தில் இராஜ யோகம் பெற்றுச் சர்வ பலத்துடனும் விளங்குகின்றது. அதனுல் இராகு பெற்றுள்ள பலாத்தியமும் அது குறிக்கும் கூட்டு எண் 4 அடைந்துஉள்ள வலிமையையும் நனிபுலனுகும்;

இந்த ஜாதகி தன்னைப்பற்றிப் பெரும் எண்ணங் கொண்டவர். ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களுக்கு இல்லாத—இவர் மட்டத்திலிருந்து ஏனைய சிற்றூழியர் வரை மேலோங்கி நிற்கும் கர்வமும் அகம்பாவமும் கொண்டவர் என்பதை நான் ஏலவே அறிந்திருந்தேன். ஆயினும் இவர் என்னைப் பொறுத்தவரை பணிவுள்ளவராகவும் அடக்கமானவருமாகவே காணப்பட்டார். இதை ஏன் கூறுகின்றேன் என்றுல் 28-ந் திகதி பிறந்தவர்களின் குணவியல்புகள் இப்படித்தான் அமைந்திருக்கும் என்பதை வாசகநேயர்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவேயாம். இவர் ஒரு கட்டத்தில் என்னிடம் எனது வேலைகளுக்கிடையில் எக்ஸ்ரேனலாக டிக்ரி முடித்து இப்போது... என்பதற்குள் நான் இடைமறித்துப் பகிடியாக சிரித்துக்கொண்டு நீங்கள் பி.எச்.டி. செய்தால் தான் என்ன? அது உங்கள் அளவிலே இருக்கட்டும். நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இப்போது நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் அழகான கவர்ச்சியான கணவனேயோ, அமைதியான குடும்பவாழ்க்கையையோ அடைவதில் சிரமங்கள் தென்படத்தான் செய்கின்றன என்றேன் மெதுவாக. எனது கூற்று இவரது எண்ண அலைகளுக்கு அணைபோடுவதாக அமைந்திருந்தது.

மேலும் எண் 32ல் அமைந்து காணப்பட்ட இந்த ஜாதகியின் பெயர் எந்த வகையிலும் பொருந்தக் கூடியதாக இல்லை. பெயர் எண்32=5 குறிக்கும் கிரகம் புதன் விருச்சிக இலக்கினகாரருக்கு மாரகராவர். ஒரு மாரகக் கிரகத்தின் எண்ணில் பெயரை அமைத்துக்கொண்டு அமைதியான மங்கலமான திருமணவாழ்வுக்கு வழிதேடுவது ஒரு விந்தையான செய்திதான். 8 - 11க்குடைய புதன் 4ல் அமைந்து கல்விப்பேற்றை வழங்குவது ஆச்சரியமானதொன்றல்ல. ஆனுல் அவன் அம்சத்தில் 6 - 9க்குடையவனுகிச் சனியினுல் தாக்கப்பட்டுத் திருமணத்தை அல்லவா—தடைசெய்த வண்ணமிருக்கிறுன். திருமணத்திற்கு 9-ம் இடமும் முக்கியத்துவம் பெற்றதொன்றுகும்.

எனவே பெயரை எண் 1ன் ஆதிக்கத்தில் உள்ள அதிட்ட எண் 37ல் மாற்றியமைத்தேன். எண் ஒன்று குறிக்கும் சூரியன் விருச்சிக லக்கினகாரருக்கு யோககாரகனுவான். இவர் 11க்குடையவராகி 5ல் தனது சுய நட்சத்திரமான உத்தரத்தில் நிற்பதால் பல நற்பலன்கள் காணலாம். தடைப்பட்ட திருமணமும் கைகூடும் என்றேன். எண் 4, 7 வரிசையில் அமைந்துள்ள திகதிகளில் பிறந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து விவாகப்பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என முடிவாகக் கூறி வழியனுப்பி வைத்தேன். (தொடரும்)

## யாழ். வானியற் கழகம்

இக் கழகத்தின் 3-ம்ஆண்டு 8-ம் பொதுக்கூட்டம் 20-2-83 ஞாயிறு பிற்பகல் 4-45 மணியளவில் தலைவர் திரு. W. S. செந்தில்நாதன் அவர்களின் இல்லத்தில் அன்னாரின் தலைமையில் நிகழ்ந்தது. அன்றைய சிறப்புறையாக ''கிரகங்களின் நிலையைக் கணித்தல்'' என்னும் விஷயம் பற்றி திரு. ந. கந்தசாமி ஐயர் விளக்கிக் கூறினுர். வானியற் காட்சிகள் பற்றிய பிரசுரத்தில் கிரகங்களின் நிலையைக் கணித்துக் கூறியிருக்கிறுர்கள். 1983-ம் ஆண்டுக்குரிய திருக்கணித ஸ்புடங்கள் (Thirukkanitha Ephemeris for 1983) எனும் கைநூலின் உதவியுடன் கிரகங்களின் நிலைகளைக் கணிக்கும் முறையினைப் பேச்சாளர் விளக்கினுர்.

''பொதுவாக சூரிய ஸ்புடத்திலும் பார்க்க கிரகங்களின் ஸ்புடங்கள் குறைவாக இருந்தால் அக்கிரகங்களை சூரியோதயதின் முன் கிழக்கு வானத்திலும், கிரகங்களின் ஸ்புடங்கள் சூரியனது ஸ்புடத்தை விடக் கூடுதலாக இருந்தால் அக்கிரகங்களைச் சூரியஸ்தமனத்தின் பின் மேற்கு வானத்திலும் பார்க்கலாம்.''

''தொலைநோக்கியைக் கழகத்தின் உரிமையாக்குவதற்கு நிதிசேகரிக்கும் வழிகளை மேற்கொள்ள வேண்டும்'' என்ற தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கழகத்தின் அடுத்த கூட்டம் 20-3-83 ஞாயிறு பி. ப. 4-30 மணிக்கு நடைபெறும்.

# ஆய்வு மன்றம்

வெ. இராமையா, நோர்வூட் S. P. நோர்வூட்

உமது ஜெனன இலக்கினம் இடபம், சந்திர இராசி கு[illegible], 4-ல் சனி, 5-ல் செவ்வாய் கேது, 9ல் சூரியன், புதன், குரு, சுக்கிரன், 10-ல் சந்திரன், 11-ல் இராகு என அமையும்.

எல்விஸ் பிரஸ்லி மச்சோடோ,
641, மீபிட்டிய - கேகாலை.

கிரகநிலை வருமாறு: இலக்கினம் - மிதுனம் இலக்கினத்தில் சூரியன் - குரு 2-ல் சந்திரன்-புதன் 6-ல் கேது 10-ல் சனி 12-ல் செவ்வாய், சுக்கிரன்-ராகு. செனனகாலம் புதன் தசையில் இருப்பு வரு 12 மீ 7 நாள் 29. தற்சமயம் கேதுதசை குருபுத்தி நிகழுகின்றது.

த. கணேசலிங்கம்,
அம்பிளாந்துறை, குருக்கள்மடம்.

தமிழரின் ஒருநாள் - சூரியஉதயம் தொடங்கி மறுநாள் சூரிய உதயம் வரையுமுள்ள பகலும் இரவும் கொண்டது. இஸ்லாமியரின் ஒருநாள் சூரிய அஸ்தமனம் தொடங்கி மறுநாள் அஸ்தமனம் வரையுமுள்ள இரவும் பகலும் கொண்டது. ஆங்கிலேயரின் நாள் - இரவு 12 மணி தொடங்கி மறுநாள் இரவு 12 மணி வரையுமுள்ள பிற்பாதி இரவும், பகலும், முற்பாதி இரவும் கொண்டது. இந்த முறைப்படி சென்ற சுபகிருது வருடம் சித்திரை மாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைக்குச் சரியான ஆங்கிலத் திகதி 1962 April 30 Monday ஆகும். எனவே உங்கள் பிறப்புப் பதிவு சரியானதே.

திருமதி. தி,ரா. ஜீவராணி, வெள்ளவத்தை

முயற்சி செய்யின் வெளிநாடு சென்று தொழில் செய்ய உரிய காலம் நிகழ்கின்றது. ஆனால் எதிர்பார்க்கும் வருமானம் முதலியன கிடைக்குமா என்பதுதான் கேள்விக்குரியது?

க. கண்ணம்மை, 343. ஏகாம்பரம் வீதி, திருமலை

"விண்ணப்பப் படிவம் இணைக்கப்படாத கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது" என்ற குறிப்பை அவதானித்து ஆய்வு மன்றத்துக்கு முறைப்படி விண்ணப்பிக்கவும்.

சிவகுரு சிவானந்தன்,
ஞானவாசா, தேவாலய வீதி, சங்கானை

உரிய விண்ணப்பப் படிவத்தில் உள்ள கிரகநிலையையும் குறிப்பிட்டு விண்ணப்பத்தை அனுப்புமாறு ஆலோசனை கூறுகின்றோம்.

சு. இரவி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

இராகு தசையில் சனி புக்தி 1980 டிசம்பர் 02 திகதி தொடங்கி 1983 செப்டம்பர் 22 வரை நிகழுகின்றது. இதன் மேல் புதன் புக்தி நிகழும்

செல்வி. கிருபாநிதி விஜுசித்தம்பி
கண்டி வீதி, கிளிநொச்சி.

நீர் பிறந்த நேரம் காலை 7 மணி 57 நிமிஷம்; திகதி 15 யூன் 1963 ஆயின் அன்று பூரட்டாதி பகல் 8 மணி 35 நிமிஷம் வரையும் இருந்துள்ளது. எனவே உமது ஜெனனத்தின் பின்பும் 38 நிமிஷம் பூரட்டாதி இருந்துள்ளதால் உமது ஜெனன நட்சத்திரம் பூரட்டாதியே. அன்று ஆனி மாதப்பிறப்பாக இருந்தாலும், சூரியன் பகல் 8 மணி 49 நிமிஷமளவில்தான் மிதுன இராசியில் பிரவேசிக்கின்றது. ஆகவே இலக்கின ராசியில் இராகு மட்டுமே இருந்தது. சந்தேகம் வேண்டாம்.

ப. பத்மசீலன், "பத்மபதி" தென்-மட்டுவில்

விவசாயம் / தொழில் நுட்பத்துறையுடன் சம்பந்தப்பட்ட தொழில் / நகர்காவல்துறை / திரவப்பொருள் வியாபாரம் / சகோதரர் அல்லது மாதாவழிச் செல்வத்தைக் கொண்டு சீவனம் செய்தல் ஆகியனவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு தொழில் கூடிய விரைவில் கிடைக்கும். விரும்பினால் வெளிநாட்டுப் பிரயாணமும் செய்யலாம்.

வி, பராந்தகன். கலட்டி, பண்டத்தரிப்பு

உமது ஜெனன திகதியின் நேரத்துக்கும், உமது சாதகக் கிரகநிலைக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாதபடி வித்தியாசப்படுவதால் முதலில் உமது சாதகத்தை நல்ல சோதிடரிடம் காட்டிச் சரிசெய்துகொள்ளுமாறு ஆலோசனை கூறுகிறோம்.



( 20-ம் பக்கம் பார்க்க)

# சோதிடம் கற்போம்

— ஞானி —

## ஜனன நேரம்

(முன் தொடர்ச்சி)

பூமியின் ஓர் குறிப்பிட்ட இடத்திலிருந்து பார்க்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஆகாயத்தில் தோற்றப்படும் கிரகங்கள் முதலியனவற்றின் நிலைகளை ஓர் படத்தில் அமைப்பதன் காரணமாகவே ஜனனநேரம் ஓர் முக்கிய அம்சமாகக் கொள்ளப்பட்டது. நேர வகைகளில் சுதேச நேரம், நட்சத்திர நேரம், பொதுநேரம் என வெவ்வேறு நேர வகைகளுள்ளன.

## சுதேசநேரம்

ஓர் தினத்தின் மணித்தியாலமானது சூரியனது நிலைக்கும் நாமிருக்கும் இடத்துக்குமுள்ள தொடர்புக்குத் தக்கவாறு அமையும், எவ்வாறெனில் சூரியன் நமது தலைக்கு மேலாக வரும்போது நண்பகலாகும். ஆனல் அதே நேரத்தில் பூமியின் மற்றைய பாகங்களிலுள்ளவர்களுக்கு வேறு வேறு நேரமாகவே இருக்கும். இந்த நேர வேறுபாடு ஒவ்வோர் இடத்துக்குமுள்ள ரேகாம்சத்திற்கு, அதாவது கிறீன்விச் (Greenwich) பட்டினத்திலிருந்து கிழக்கு அல்லது மேற்காக வரையப்பட்ட ரேகாம்ச ரேகைகளுக்குத் தக்கவாறு வித்தியாசப்படும்.

இந்த நேரவேறுபாடு பாகை ஒன்றுக்கு 4 நிமிஷங்களாகும், கிறீன்விச் பட்டினத்தில் பகல் 12 மணியாக இருக்கும்பொழுது அதற்குக் கிழக்குத் திசையில் 2 பாகை தூரத்திலுள்ள இடத்தின் நேரம் 12 மணி 08 நிமிஷமாகும். மேற்கே 2 பாகை தூரத்திலுள்ள இடத்தில் 11 மணி 52 நிமிஷமாக இருக்கும். அதாவது கிழக்கேயுள்ள இடங்களில் முன்னதாகவே சூரியன் தலைக்கு மேலே காணப்படும். மேற்கேயுள்ள இடங்களில் இன்னும் சில நேரம் பிந்தியே சூரியன் தலைக்கு மேலாகக் காணவேண்டி வரும். எனவே கிறீன்விச் பட்டணத்திற்கு கிழக்கே உள்ள இடங்களில் பாகை ஒன்றுக்கு 4 நிமிஷ வீதம் கூடியும், மேற்கே உள்ள இடங்களில் அவ்வாறே குறைந்துமிருக்கும்.

இலங்கையில் யாழ்ப்பாண பட்டினம் கிறீன்விச்சுக்குக் கிழக்கே 80 பாகை ரேகாம்சத்திலிருப்பதால் சூரியன் கிறீன்விச்சில் தலைக்கு மேலாக வரும்பொழுது யாழ்ப்பாணத்தின் நேரம் பாகை ஒன்றுக்கு 4 நிமிஷவீதம் கணக்கிட ($80 \times 4 = 320$) 5 மணி 20 நிமிஷமாகும். அப்பொழுது யாழ்ப்பாணத்தின் நேரம் பிற்பகல் 5 மணி 20 நிமிஷமாகும்.

அமெரிக்காவில் உவாஷிங்டன் பட்டினம் கிறீன்விச்சுக்கு மேற்கே 77 பாகை தூரத்திலிருப்பதால் முன்போல் கணக்கிட (77 X 4 — 308நி) 5 மணி 8 நிமிஷமாகும். அதாவது கிறீன்விச்சில் பகல் 12 மணியாக இருக்கும்போது உவாஷிங்டனில் (5 மணி 8 நிமிஷம் முந்தி) காலை 6 மணி 52 நிமிஷமாக இருக்கும். மேலும் பூமியின் சுழற்சியால் உவாஷிங்டனில் பகல் 12 மணியாக இருக்கும்போது கிறீன்விச்சில் பிற்பகல் 5 மணி 8 நிமிஷமாக இருக்கும்.

1 பாகைக்கு 4 நிமிஷமாவதால் ½ பாகை(30′) 2 நிமிஷத்துக்கும் ¼ பாகை (15′) 1 நிமிஷத்துக்கும் சமமாகும்.

கவனிப்பு: ஆங்கிலத் திகதியும், வாரமும் தமிழ்த் திகதியின் முதனளிரவு 12 மணி தொடக்கம் அன்றிரவு 12 மணி வரையுமுள்ள நேரத்தையும், தமிழ்த் திகதியும் வாரமும் அன்று சூரிய உதயம் தொடக்கம் மறுநாள் சூரிய உதயம் வரையுமுள்ள காலத்தையும் குறிக்கும். இதனைக் கொண்டு முற்பகல் பிற்பகல் மாற்றங்களையும், திகதி மாற்றங்களையும் அவதானிக்க வேண்டும்.

இவ்வாறு சுதேச நேரங்கள் அமையும்போது ஒரு நாட்டில் பலவகையான நேரங்கள் கைக்கொள்ள நேரிடும். அப்போது நாட்டின் லௌகிக விவகாரங்கள் அனைத்தும் சீராக நடைபெற முடியாதாகையால் ஒவ்வோர் நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை அந்நாடு முழுவதும் பாவிக்கும்படி அவ்வவ் அரசாங்கத்தால் கைக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை பொதுநேரம் என அழைப்பர். இதனை அடுத்த இதழில் விளக்குவாம்.

(தொடரும்)

சோதிட ஆராய்ச்சி

# தமிழ் ஈழம் மலருமா?

வே. சின்னத்துரை நல்லூர்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1982-ம் ஆண்டு தை மாதம் 14-ம் திகதி பொங்கல்தினத்தன்று தமிழீழத்தில் புதிய அரசாங்கம் செயற்படத் தொடங்கும் என்பதே அத்தீர்மானமாகும். இங்குள்ள தலைவர்களுக்கு இது சரியெனப் படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்த நிறைகுடம்பேன்ற ஒரே ஒரு தலைவர் - நிதானம் தவருத தலைவர் - தமிழீழ விடுதலையை உண்மையாகவே விசுவாசித்த ஒரு மகான் திரு. வைகுந்தவாசனேயோ லண்டன் தீர்மானத்தையோ கண்டிக்கவும் இல்லை; திட்டவும் இல்லை மகிழ்வோடு அதை வரவேற்றுர். அதை ஊக்கப்படுத்தினர். உற்சாகமூட்டினுர். மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுக்கு சென்ற போதும் திரு வைகுந்தவாசன் திரு. சிறீதரன் போன்ரேரைச் சந்தித்து ஈழவிடுதலைப் பிரகடனத்திட்டத்துக்குத் தனது பூரண சம்மதத்தையும் ஆதரவையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தார்.

அவர் 23-2-81-ல் திரு. வைகுந்தவாசனுக்கு உற்சாகமூட்டும். பின்வரும் கடிதத்தை எழுதியிருந்தார். ''அன்புள்ள வைகுந்தவாசன் அறியவும். நீங்கள் டெல்லியில் இருந்து கெதியில் லண்டன் திரும்பியதாக அறிந்தேன் டெல்லியில் இந்தியத் தலைவர்களுடைய நிலை என்ன? அவர்கள் எங்களை ஆதரிப்பார்களா? இந்தியாவின் ஆதரவு கிடைத்தால் துரிதமாக முன்னேறலாம். இனி லண்டனும் முக்கியம். லண்டன் பாராளுமன்றம் தீர்த்தால் பொதுநல நாடுகள் எங்களைச் சேர்த்து ஆதரிக்கலாம். சுதந்திரப் பிரகடனத்துக்கு இது அவசியம். தமிழ் ஈழம் என்ற ஆங்கிலத்தில் வந்த உங்கள் புத்தகத்தில் 50 பிரதிகள் எனக்கு அனுப்ப முடியுமா? நான் அவற்றை முக்கிய சிங்களத் தலைவர்களுக்குக் கொடுப்பேன். இங்குவரும் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கும் கொடுக்க வைத்திருப்பேன். மேற்கு நாடுகளில் நீங்கள் தொடர்ந்து செய்யும் வேலைகளைப் பற்றி எழுதவும். உங்கள் முயற்சிகள் பெற்றிபெற வாழ்த்துகிறேன். நான் அடுத்தமாதம் பிற்பகுதியில் டில்லி போகலாம் என்று இருக்கிறேன். எல்லாம் சுகவீனத்தைப் பொறுத்த விடயம், மதுரை மாநாட்டுக்குப்பின் பிரயாணம் செய்ய முடியாமல் சுகவீனம் தடையாக இருக்கிறது. என்ருலும் அடுத்தமாதம் டெல்லிக்குப் போகத்தான் இருக்கிரேன். பிரசாரத்துக்குப் போகவில்லை. இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்த முயற்சிப்பேன். உங்கள் புத்திமதி அதற்குத் தேவைப்படுகிறது. இங்ஙனம், தங்கள் அன்புள்ள சி. கதிரவேற்பிள்ளை பா. உ.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 9-81 | | செவ் |
| | | | |
| | | | சூ, வெ வி சனி |

12-8-81 நள்ளிரவு இராணுவத்தினரும் பொலீசாரும் 1979 அவசரசாலச் சட்டத்தில் பொலீசாரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட காலஞ்சென்ற விஸ்வஜோதி இரத்தினம் அல்லது இன்பம் என்பவரின் நவாலி இல்லத்தை சுற்றிவளைத்து இன்பம் எங்கே? அவரைக் கொண்டுவாருங்கள் என கெடுபிடியாக நடந்து கொண்டார்கள். அதோடு இன்பத்தை ஆஜராக்குமாறு அவரது வீட்டாருக்குத் தொல்லை கொடுத்தனர். அத்துடன் 14-7-79-ல் பொலீசாரால் கைது செய்யப்பட்டு பின்பு அவருக்கு என்ன கதி நடந்ததென்று இன்னும் தெரியாத நவாலி பாலேந்திராவின் வீட்டையும் முற்றுக்கையிட்டு தேடுதல் நடத்தினர்.

19-8-81 மாலை பதுளையில் இருந்து கொழும்பு செல்லும் புகையிரதப் பெட்டியில் பிரயாணம் செய்யும் இந்தியா திரும்பும் 50 க்கு மேற்பட்ட தமிழ் பிரயாணிகள் உளப்பனை ரயில் நிலையத்திற்கு முன் சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டு அவர்களுடைய பெறுமதி வாய்ந்த உடைமைகள் சூறையாடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 10-81 | | செவ் |
| | வெ | சு | |

15-10-81 யாழ்ப்பாணம் காங்கேசன்துறைவீதியில் இரு இராணுவத்தினர் இனம்தெரியாதவரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இத்துடன் இன்னும் இரு தமிழர்கள் இரணுவத்தினரால் சுடப்பட்டனர். இச்சம்பவத்தையடுத்து பொது மக்கள் ஆங்காங்கே பல இடங்களிலும் இராணுவத்தால் தாக்கப்பட்டனர்.

18-10-81 அநுராதபுரம் புனித நகரில் மாவடியில் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சைவ ஆலயம் உடைக்கப்பட்டு விக்கிரகங்கள் புதைபொருள் ஆராய்ச்சிக் கலைக்கூடத்திற்கு அனுப்பப்பட்டது.

22-10-81 கிளிநொச்சி மக்கள் வங்கி கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டது. அப்போது இராணுவத்தினருக்கும் கொள்ளையர்களுக்குமிடையில் துவக்குச் சண்டையில் இராணுவவீரர் ஒருவர் மரணமானார். இதையடுத்து சாவகச்சேரியில் கடைகள் உடைக்கப்பட்டன இராணுவத்தாரால்.

23-10-81 யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற புகையிரதத்தில் சிவில் உடையில் சென்ற இராணுவத்தினர் பிரயாணிகளை தாக்கினார்கள். ஆனால் சூறையாடவில்லை.

24-10-81 கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த புகைவண்டியில் வந்த தமிழ் பிரயாணிகள் அனுராதபுரம் வரும்வரை தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டனர். அன்று பொலீசாரால் தேடப்படும் சந்தேக நபரான உமாமகேஸ்வரனின் வறுத்தலைவிளானிலுள்ள வீடு சோதனைக்குச் சென்ற இராணுவத்தினர் வீட்டுக்கு தீயிட்டனர். மறுமுறையும் தீபாவளியன்று தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது. அங்கு நின்ற ஆடொன்றையும் பிடித்து வெட்டிய இராணுவத்தினர் உமாமகேஸ்வரனைப் பிடித்தால் இப்படித்தான் வெட்டுவோம் என்று கூறி அவரது தந்தை சகோதரர்களை அச்சுறுத்தினர்.

25-10-81 பாணந்துறையில் கடைகள் தீவைப்பு நீர்கொழும்பிலும் கடைகள் உடைப்பு, காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகளிலும் போவோர் வருவோரைத் தாக்கினார்கள்.

28-10-81 ஆரியகுளச் சந்தியில் இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டு வீடுகளை சோதனைக்குட்படுத்தினர்.

30-10-81 உரும்பிராயிலுள்ள திருமதி பொன்னுத்துரை 65 வயதானவரின் வீட்டிற்குள் புகுந்து இரு இராணுவத்தினர் 5-6-74-ல் மரணமான சிவகுமாரனை அங்கு துவக்குமுனையில் தேடினார்கள். அவன் எங்கே? அவனுக்கு எத்தனை சகோதரர்? அவன் எப்படிச் செத்தான்? ஏன் செத்தான்? என்று கேட்டார்களாம்.

4-11-81 சுன்னாகம் பொலீசார் சென்று அங்கே விசாரித்தார்கள். சிவகுமாரன் எங்கு இறந்தான்? எந்த வாட்டில்? யார் பிரேதப் பரிசோதனை செய்தது? பிரேதம் எங்கே இருந்து எடுத்தது? என்று கேட்டார்களாம். உண்மையில் சிவகுமாரன் இறந்தானா? இறக்கவில்லையா? என்ற சந்தேகம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறதாம்.

தமிழ் ஈழ விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம் சிறீ லங்கா நாடாளுமன்றத்தில் எடுத்துக் கூறியது. ''தமிழ் மக்களின் சார்பில் நாங்கள் இச்சபைக்கு வந்திருக்கிறோம். நாம் எமது கொள்கையை இலட்சியத்தை அச்சபையின் மூலம் நாட்டு மக்களுக்கும் உலகத்திற்கும் ஒளிவு மறைவின்றிக் கூற ஒருபோதும் பின்நிற்கப்போவதில்லை. எமது தமிழ் நாட்டிலும், போத்துக்கேயரிடம் 1619-ம் ஆண்டு இழந்த இறைமையை மீண்டும் எமது மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டிய பெரும்பணியை இன்று நாம் மேற்கொண்டிருக்கிறோம். அரசியலில் தமிழ் மக்கள் இன்று வாழ்வதா? சாவதா? என்ற ஜீவமரணப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். வெறும் வார்த்தை அளவிலே மட்டுமன்றி நடைமுறையிலும் இதே நிலைமைதான். யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லமும், ஜீப்பும் எரிக்கப்பட்டு அவர் உயிரைப் பாதுகாப்பதற்கு தமது மனைவியுடன் ஓடிய சம்பவமும், எனது அலுவலகத்தில் தூங்கிக்கொண்டிருந்த தமிழ் இளைஞன் ஒருவன் நள்ளிரவில் சுட்டுக்கொல்லப்பட்டதும், இதையே எடுத்துக் காட்டுகிறது. ஒருவர் தனது கொள்கையை உடையை மாற்றிக் கொள்வது போல மாற்றிக் கொள்ள முடியாது. எமது கொள்கை தமிழ்

மக்கள் போர்த்துக்கேயரிடம் இழந்த இறைமையினை மீளப் பெறுவதேயாகும். இதில் ஒளிவு மறைவுக்கிடமில்லை. இலங்கையின் வரலாறு என்ற நூலை எழுதிய கே. எம். டி. சில்வா தனது நூலில், இலங்கைத் தீவுக்கு புதிய அரசியலமைப்பு எழுதப்படும்போது யாழ்ப்பாணம் ஓர் அல்ஸ்ற்றர் மாகாணமாக மாறும் என்று 1931-ம் ஆண்டே எழுதியிருக்கிறார்.

இது இலங்கையிலே மட்டும் உள்ள ஒரு பிரச்சினை அல்ல. கனடாவில் குவீபெக் மக்கள் சுதந்திரம் கோருகிறார்கள். இங்கிலாந்தில் வேல்ஸ், ஸ்கொட்டிஷ் மக்களும் தமது சுதந்திரத்துக்காகப் போராடி வருகின்றனர். அவர்களைப்போலவே நாமும் எமது இழந்த இறைமையைத்தான் கோருகிறோம். அந்த நாட்டு அரசாங்கங்கள் ஆணைக்குழுக்களையும் அதிகார சபைகளையும் அமைத்து அவர்களது கோரிக்கைகளை எவ்வாறு ஈடு செய்யலாம் என்பதை ஆராய்ந்து வருகின்றன. தேசிய இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற முனைப்பு அந்த நாட்டு அரசுகளிடம் காணப்படுகின்றன. ஆனால் இங்கே நாம் நமது இலட்சியமான தமிழ் மக்களின் இழந்த இறைமையை நிலைநாட்டுவதையே நமது ஒரே இலட்சியமாகக் கொண்டு உழைக்கும்போது இச்சபையிலே ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறும்போது காலிமுகத்திடலில் வைத்துச் சுட்டுக் கொல்லுவோம் கழுமரத்தில் ஏற்றுவோம் என்று இச்சபையிலே பேசுகிறீர்கள்; இதுபோல் உலகில் வேறெந்த நாட்டிலும் நடந்தது கிடையாது.

வேலை வாய்ப்பு தொழில் துறையில் கூட தமிழர்களுக்குரிய விகிதாசாரம் வழங்கப்படவில்லை. அரசாங்க நியமனங்களில் தமிழர்களுக்குக் கிடைத்த நியமனங்கள் எத்தனை? வேலை வாய்ப்புப்பெறத் தமிழர்களுக்கு உரிமை இல்லையா? இதில் அரசின் கொள்கையென்ன? உங்களது பாரபட்சமான கொள்கைகாரணமாகத்தான் தமிழர்கள் உங்களிடமிருந்து விலகிச் செல்லத் தீர்மானித்துள்ளார்கள். திறமைக்கு இடமளிக்கத் தயங்குகிறீர்கள். திறமையின்மை உங்கள் நிர்வாகத்தில் ஆட்சி செலுத்துகிறது. இலங்கையில் ஏழைகளில் ஏழைகளாயிருக்கும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்னைய வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட எழுபது ரூபா சம்பள உயர்வு கூட இன்னும் வழங்கப்படவில்லை. அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் இல்லை. அடிப்படையிலேயே ஒதுக்குகிறது. இந்த வரவு சிலவுத் திட்டங்களில் ஒவ்வொன்றிலும், பாதுகாப்பு செலவினங்கள் அதிகரித்தே வந்துள்ளன. அது ஏன்? நாம் யாருடன் சண்டை செய்யப் போகிறோம்? யாரிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதங்களைப் பெருக்குகிறோம்?

(தொடரும்)

## சோதிடமலர்

6-வது ஆண்டு இதழ்

எதிர்வரும் சித்திரை மாத இதழ் 6-வது ஆண்டுச் சிறப்பு மலராக வெளிவரவிருப்பதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். இச்சிறப்புமலர் பல சோதிடமேதைகளின் அறிவுப் பொக்கிஷங்களையும், கவிதை, கட்டுரை என்பவற்றையும் தாங்கி வெளிவரவிருக்கிறது.

- நட்சத்திர ரீதியில் புத்தாண்டுப் பலன்
- புத்தாண்டில் உலக பலாபலன்

என்பனவற்றை உள்ளடக்கி பல கட்டுரைகளுடன் அதிக பக்கங்களில் மலருகின்றது.

உங்கள் பிரதிகட்கு முன்கூட்டியே ஏஜண்டுகளிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# * மணப்பந்தல் *

| | | | |
|---|---|---|---|
| வி | | சூரி புத | லக், செவ் சு, ரா |
| | கிரகநிலை | | |
| | | | |
| கே | சனி | சந் | |

## ஜாதகம் 37: ஆண்

பிறந்த திகதி: 15-6-1927

நட்சத்திரம்: சுவாதி

சைவாசாரமும், குடிப்பழக்கமுமற்ற இவர் பயிற்றப்பட்ட ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். சைவ போசனமுடையவர். கோவிய வகுப்பைச் சார்ந்த இவருக்கு இதே வகுப்பைச் சேர்ந்த சைவாசாரமுள்ள படித்த பெண் தேவைப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| லக் கே | வி சனி | | |
| | கிரகநிலை | | சுக் |
| சந் | | | சூரி செ |
| | | புத | ராகு |

## ஜாதகம் 38 பெண்:

பிறந்த திகதி: 10-10-1940

நட்சத்திரம்: திருவோணம் 3-ம் பாதம்

சைவ போசனமுள்ள இப்பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவைப்படுகின்றார்; பெண்ணுக்கு சீதனமாக வீடுவளவு, 2 பரப்புக் காணி, நகை, ரூபா 10,000 என்பன வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| சுக் | ராகு | | சந் |
| சூரி | கிரகநிலை | | சனி |
| புத | | | செ |
| வி | லக் | கே | |

## ஜாதகம் 39: பெண்

பிறந்த திகதி: 21-2-1948

நட்சத்திரம்: புனர்பூசம்

உயர்சைவ வேளாண் குலத்தைச் சேர்ந்த இப்பெண் H.S.C., G.A.Q. வரை படித்தவர். வசதிக் கட்டணத்தில் ஆசிரியையாகக் கடமை புரிகிறார். சுத்த போசனமும், நல்ல உத்தியோகத்திலுமுள்ள மணமகன் தேவை, பெண்ணுக்கு சீதனமாக ரூபா $1\frac{1}{2}$ லட்சம் கொடுக்கப்படும்.

---

இப்பகுதிக்கு திருமணத்தை எதிர்நோக்கும் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். பிறந்த ஆண்டு, மாதம், திகதி, நேரம், கிரகநிலை, நட்சத்திரம், தகைமை, ஆண், பெண், விலாசம், மரபு மற்றும் விபரங்கள் ஆகியவற்றைக் குறித்து அனுப்பவும். பெயர் விலாசம் இரகசியமாக வைக்கப்படும். இவ்வாறு பல சாதகங்கள் வெளிவரும்போது உங்களுக்கு பொருந்தக்கூடிய ஜாதகத்தையும் நீங்களே தெரிவு செய்யலாம். எம்முடன் தொடர்பு கொண்டால் உரியவர்களை நாம் அறிமுகம் செய்து வைப்போம். இது பல ஜாதகங்களைத் தேடிச்செல்லும் சிரமத்தை தவிர்க்கும்.

முக்கியகுறிப்பு! விண்ணப்பத்துடன் ஒரு ஜாதகத்துக்குப் பிரசுரச் செலவாக ரூபா 10/- பின்வரும்முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும் (காசுக்கட்டளைகளில் 'திருக்கணித நிலையம்' என்று எழுதப்படவேண்டும்) பதில் தேவையானோர் முத்திரை, கடிதஉறை அனுப்பவும்.

விலாசம்: ''மணப்பந்தல்'' சோதிடமலர், திருக்கணித நிலையம், மட்டுவில், சாவகச்சேரி.

# இலங்கை சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் மாசி மாதக் கூட்டம் 27-2-83-ல் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் மாலை 4-15 மணியளவில் திரு ந. கந்தசாமி ஐயரின் தலைமையில் ஆரம்பமாயிற்று.

சென்ற கூட்ட அறிக்கையும், பொருள் அறிக்கையும் வாசிக்கப் பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இம்மன்றத்திற்கு ஒருவாசிகசாலை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்பு பிரதம பேச்சாளரான திரு த. பர்க்கியராசா அவர்கள் கைரேகையும் எண் சோதிடமும் பற்றிப் பேசினூர். பின்பு இதில் கலந்துரையாடல் நடந்தது. திரு கே. என். நவரத்தினமவர்கள் நன்றியுரை கூறினூர்கள். 6-30 மணியளவில் கூட்டம் நிறைவேறியது.

அடுத்த கூட்டம் 27-3-83-ல் கூடும். அன்று திரு வே. சின்னத்துரை அவர்கள் செவ்வாய் தோஷம் பற்றிப் பேசுவார்கள்.

## திருக்கணிதம் வாழி! வாழி!!

— செல்வி தேன்மொழி அருளம்பலம், கல்வயல். —

பஞ்சாங்கத்தின் பேராசான் திருக்கணிதம்
பாருலகில் பாமரரும் தெரிந்தவுண்மை
விஞ்சுபுகழ் வான்கோள்கள் கணிதசுத்தம்
கொஞ்சுமெழில் திருக்கணிதத் தனிச்சிறப்பு

*

உதித்துவரும் செம்பரிதி சின்னங்கொண்ட
திருக்கணிதம் சோதிடத்தின் திறவுகோலாம்
நிதியாகும் தமிழ்வாழும் உலகனைத்தும்
பதியெல்லாம் பாரனைத்தும் பரந்திருக்கும்

*

முருகனது திருக்கரத்தின் வேலைப்போன்ற
அருந்தமிழர் பேணுவிரதாதி முகூர்த்தங்கள்
தருகின்ற தவறற்ற தனிச்சிறப்பு
திருக்கணிதம் ஒன்றே தமிழர்சொத்து

*

வான்கோள்கள் ஆய்வுசெய்து அதைக்கணித்து
தேன்தமிழில் தருகின்ற தனித்திறமை
மண்ணுலகில் அறிஞரெலாம் போற்றுகின்றூர்
மாண்புமிகு விருதுகளும் சூட்டுகின்றூர்.

*

புத்தாண்டு தீபாவளி புனிதமிகுவிளக்கீடு
பக்திமிகு நவராத்திரி நல்லசிவராத்திரி
இத்தரையில் தவறின்றி எடுத்துரைக்கும்
சுத்தமிகு திருக்கணிதமே வாழி வாழி.


## மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி

அனேகரது பாராட்டுக்களைப் பெற்ற இந்த ஸ்தாபனம் அனேக மணமக்களை இல்லறத்தில் புகுத்தி வருகிறது. எம்மிடம் டாக்டர், எஞ்ஜினியர், அக்கவுண்டன் இன்னும் பலவகையானவர்களின் ஜாதகக் குறிப்புகள் உள்ளன. விரும்புவோர் விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் வரவும். மிக விரைவில் உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.


முக்கியகுறிப்பு:

சோதிடமலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துக்களேயாகும். கட்டுரையாளர்களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 11

## முதலாம் பரிசு ரூ. 50/-

போட்டி நிபந்தனைகள்

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-4-1983க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்ருவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 11
சோதிடமலர்

மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | 2 | 3 ம் | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 க | 11 | 12 து |
| 13 | ▒ | 15 | 16 | ▒ | 18 ம் |
| 19 மா | 20 | 21 ர | 22 | 23 | ▒ |
| 25 | 26 ப | 27 | 28 ப | 29 | 30 |
| 31 | 32 | ▒ | 34 | 35 தா | 36 |

பெயர் [illegible]

விலாசம் [illegible]

இடமிருந்து வலம்

1. கிரகங்கள் சூரியனுக்கு ஒரு குறிப்பிட்ட தூரத்தில் வரும்போது பூமியிலுள்ளோர்க்கு தோற்றுதிருப்பதை மாறியுள்ள இச்சொல்லால் அழைக்கப்படும்.
2. இவ்வருட மஹாசிவராத்திரி தினத்தை இப் பஞ்சாங்கம் மட்டுமே சரியாகக் கணித்து மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது.

15. கிரகங்களின் சுற்றோட்ட வேகம்.
19. நான்காவது அனைத்துலக தமிழராய்ச்சி மகாநாடு குழம்பியுள்ள இவ்வருடத்திலேயே நடைபெற்றது.
25. வைகாசி மூலத்தன்று இவரின் குருபூசைத் தினம். நிலைமாறியுள்ளது.
31. தலைகீழான இதன் முன் 'க' சேர கையாகும்.
34. ''ஊர்வசி'' விருது பெற்ற நடிகை ஒருவர் [குழம்பியுள்ளார்.

மேலிருந்து கீழ்

1. இருமாத சங்கிராந்திகளுக்குள் ஒரு சாந்திர மாதம் அடங்கிவிட அம்மாதம் சௌரசங்கிராந்தியைப் பெருத காரணத்தால் இவ்வாறு அழைக்கப்படும்.
2. ஈரெழுத்துக்கொண்ட இச் சொல் மரத்தைக் குறிக்கும்.
3. வண்டியோடப் பயன்படும் இது ஓர் ஆயுதத்தையும் குறிக்கும். மாறியுள்ளது.
4. வியாழ பகவானுக்கு கடும் மயக்கம் ஏற்பட்டுவிட்டது.
5. தேவகாரியங்கள் ஆரம்பிப்பதை இதன் ஒலி மூலமே அறிவிக்கப்படுகிறது.
6. செல்வத்தைக் குறிக்கும் இதனை ஜாதகத்தில் 2-ம் இடத்திஞல் அறியலாம். குழம்பியுள்ளது.

20. குழம்பியிருப்பதனுல் ''வலிமை'' குன்றிவிட்டது.
23. சோதிடமலருக்கு இது செலுத்திவிட்டால் ஒவ்வோர் மாதமும் மலர் வீடுவந்துசேரும்.
30. பெரியோர்களை அழைக்கும் ஆங்கிலப்பதம் தலைகீழாகவுள்ளது.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 10 இன் விடைகள்

இடமிருந்துவலம்

1. முகூர்த்தம் 7. துறை 10. தினம் 15. தகவம் 19. அசுவினி 29. இர(வி) 32 வைத்தியர்

மேலிருந்துகீழ்

1. முதுவேனில் 2. கூறை 4. அத்தம் 5. தனம் 6. களத்திரம் 15. சுவர்ண 29. இவை.

பரிசில் பெறுவோர்:

1-ம் பரிசு: ச. சிதம்பரம்பிள்ளை
வட்டு - மேற்கு,
வட்டுக்கோட்டை.

2-ம் பரிசு: P. மிருநாளினி
கொடிகாமம் றோட்டு,
நெல்லியடி, கரவெட்டி.

3-ம் பரிசு: செல்வி கோ. வாசுகி
476, இராமநாதபுரம், கிளிநொச்சி




## காலம் பெறுமதியானது!

வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும்
மீட்டு உபயோகிக்க முடியாது,
எனினும் இதையறிந்த பின்பும்
எவ்வளவு நேரத்தை வீணுக்குகிறோம்.

— மகாத்மாகாந்தி

எனவே! நொடிப்பொழுதில் உங்கள் ஆடைகளின்
அழுக்கை அகற்றி பளிச்சிடும் வெண்மையைப் பெறுவதற்கு
பாவியுங்கள் **சுப்ப - மில்க்வைற் - சோப்**

இது மில்க்வைற் புதிய தயாரிப்பு — ஒரு கட்டி விலை ரூபா 4/– மட்டுமே!
மேலுறைகளுக்கு பரிசில்கள் உண்டு.

# மில்க்வைற் தொழிலகம் — யாழ்ப்பாணம்

## சந்தா நேயர்களுக்கு

**அன்புடையீர்!** அன்பு வணக்கம்,

தாங்கள் சோதிடமலருக்கு நல்கிவரும் ஆதரவிற்கு நன்றி· இம்மலர் 6-வது ஆண்டை அடைந்துள்ள பெருமை வாசக நேயர்களுக்கே உரியது. அறுகுபோல் வேரூன்றி இன்னும் பல நூற்றுண்டுகளுக்கு மணம் பரப்பும் என்ற நம்பிக்கை உண்டு.

6-வது மலருக்குரிய சந்தாவை **1-4-83** க்கு முன் எமக்கு அனுப்பிப் புதுப்பித்துக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். சந்தாப் பணம் அனுப்பும்போது விலாசத்தையும், சந்தா இலக்கத்தையும் குறிப்பிடவும். புதிய அங்கத்தவர்களையும் அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டாகும்:

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ **39-60** |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல்வழி) | வருட சந்தா | ,, **70-00** |
| | இந்தியா | (விமான வழி) | வருட சந்தா | ,, **96-00** |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, **126 00** |
| | இங்கிலாந்து | (விமான வழி) | வருட சந்தா | ,, **150-00** |

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.

அமோக விற்பனையாகிறது

ருதிரோற்காரி வருஷ

# திருக்கணித பஞ்சாங்கம்

## (1983-84)

*

நவராத்திரி, சிவராத்திரி போன்ற சமயானுஷ்டானங்களை
சாஸ்திர முறைப்படி சரியாகக் கணித்து,
மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்று நிகரற்று விளங்குவது

## திருக்கணித பஞ்சாங்கம்

*

மங்கள சூரியன் சின்னத்துடன் உங்கள் இல்லங்களை
மங்களகரமாக விளங்கவைப்பது

## திருக்கணித பஞ்சாங்கம்

*

விலை ரூபா 12-50 மட்டுமே
(தபாற் செலவு வேறு)

விபரங்கட்கு:

## திருக்கணித நிலையம்

மட்டுவில் — சாவகச்சேரி

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal
Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280